108

ஓம்.

நீதி நெறிக் கும்மி.

ஆசிரியர்

சி.ப. திரவிய நாடார் அவர்கள்

தளவாய்புரம், கோவிற்பட்டி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1950
MADRAS

பதிப்பாளா

ப.க.ரா. பால்பாண்டிய நாடார்

அவர்கள்

விற்பட்டி

O-,85MDV,N
N50.
678223

ஓம்.

நீதி நெறிக் கும்மி.

ஆசிரியர்

சி.ப. திரவிய நாடார் அவர்கள்
தளவாய்புரம், கோவிற்பட்டி.

பதிப்பாளர்
ப.க.ரா. பால்பாண்டிய நாடார் அவர்கள்
கோவிற்பட்டி.

சரஸ்வதி பிரஸ், கோவில்பட்டி;-50,

1950
MADRAS

ஆசிரியர்.

சி. ப. திரவிய நாடார்.

பதிப்பாளர்.

ப. க. ரா. பால்பாண்டிய நாடார்.

ஓம்.

சாற்றுக் கவிகள்.

மதுரை மாவட்ட நாட்டாண்மைக்கழக உயர்நிலைப் பள்ளிகளில் தலைமைத்தமிழ்ப் பண்டிதராக இருந்து ஓய்வு பெற்று கம்பம் யூனியன் உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழ்ப்பண்டிதராக இருந்துவரும்

பண்டித வித்துவான்:

தி. சங்குப்புலவர் அவர்கள்

இயற்றியது.

அறுசீர் அகவல் விருத்தம்

அருந்துதள வாய்நணுகிப் பாய்புலிபோல்
வறுமைதமை யணுகி யாங்கே
யிருந்துதள வாய்திறந்தீ யெமக்கெனவந்
திரப்பவருக் கீயும் வள்ளல்
முருந்துதள வாய்வயங்கு நகைமடவார்க்
கெழின்மதனன் முதன்மைச் செந்தூர்ப்
பொருந்துதள வாய்புரத்திற் பிறந்துகுடி
யிருந்துவரும் புகழ்சே ரண்ணல் 1

முருகுகமழ் பருவமல ரிடையளிகண்
மதுநுகர்ந்து மொய்க்குஞ் சோலை
மருவியகோ விற்பட்டி தனில்வணிக
மேவியசீர் வாழ்வு கொண்டோன்
பெருகுபுகழ் ராசபா ளையஞ்சிவகா
சியிலுநலம் பிறங்கு மேன்மைத்
திருவுறுவா ணிகம்புரிந்து சிறந்தபுக
ழொடுநிதியந் திரட்டுங் கோமான் 2

வானவர்க ளருந்துமொரு மருந்தெனினும்
விருந்தின்றி வாயுட் கொள்ளான்

ஈனமுறு பொருள்வரவு கருதியிழி
தொழில்புரியு மெண்ண மில்லான்
தானமொடு தவங்கருணை பொறையடக்க
மின்சொலன்பு தகவு வாய்மை
ஞானமுத லாயபல நற்குணமாம்
பொருளீட்டி நன்கு வாழ்வோன் 3

நாடுமொழி யினங்கலைக ளாக்கமுறத்
தொண்டுபல நாளுஞ் செய்வோன்
பாடுதமிழ்ப் புலவர்வரி சையையறிந்து
பரிசுதரும் பண்பு வாய்ந்தோன்
கூடுநட்பி னியல்பறிந்து கூடியதை
மிகவளர்க்குங் கொள்கை பூண்டோன்
நீடுமுல கத்திதுவே நிற்பதென
நற்புகழை நிறுவும் வள்ளல் 4

பரவியநற் கடலாடைப் பாரிலுள
கலைகளெல்லா பயின்று தேர்ந்தோன்
கரவியலு மனத்தாரைக் கலவாதான்
புவிவாழ்விற் கமலப் பன்னம்
விரவியநீர்த் துளிபோலப் பற்றின்றி
வாழுமுயர் விவேகன் யார்க்குந்
திரவியம்போ லிவணுதித்தோன் திரவியமென்
னும்பெயர்கொள் செல்வப் பூமான் 5

திருக்குறளு லடிபோன்ற நீதிநூற்
பயனுணர்வார் சிலரே யிந்நாள்
இருக்குமுல கியற்கைவெள்ளை யிசைக்கவியை
விரும்புவதென் றெண்ணி யாண்டும்
பெருக்கமுள சபைகழகம் பிதற்றுதல்கேட்
டுளமயக்கம் பெறுவார் நெஞ்சத்

தருக்கடங்கி மெய்ஞானஞ் சாரும்வகை
யாதெனவுந் தானே யாய்ந்து 6

ஆதிபக வனைப்போற்ற லறிஞரியற்
றியநூல்க ளனைத்தும் நாடி
யோதியுணர்ந் திடலுண்மை யறிவொழுக்கங்
கடைப்பிடித்த லுயர்வைத் தாராச்
சாதிமதஞ் சபைகழக விகற்பமெலாம்
விடுத்தலின்ன தகவு பெற்று
நீதிவழி யொழுகும்வகை நீதிநெறிக்
கும்மியொன்று நிகழ்த்தி னனால் 7

அக்கும்மியி லடங்காத பொருளில்லை
யரசியலு மடிமை வாழ்வும்
மிக்ககுடி யரசுவந்த விதமுமத
னைப்போற்றும் விதமு மாந்தர்
தொக்கசபை கழகம்பல் குலமதவா
திகள்செயலுஞ் சொல்லும் நீதி
தக்கதுவும் மெய்ப்பொருளும் யோகமுஞ்ஞா
னமுமுளவே சாற்றற் பாற்றே 8

இத்தகவார் நீதிநெறிக் கும்மியைச்
சிறப்பித்தே யெங்குஞ் செல்லப்
புத்தகமாக் கின்னநூற் புலவனுற
வினன்புகழே பொருளாக் கொண்டோன்
நத்தகமெய் யுத்தமர்தந் நண்புடையான்
பண்புடையா னலஞ்சேர் கல்வி
வித்தகவற் புதமுறுபால் பாண்டியனும்
பெயர்பெற்ற மேலோன் மாதோ 9

கூத்திபாறையென்னும் நல்லூர்
விஸ்வஜ்ஞ ஸ்ரீமத் முத்துகிருஷ்ண மதுரகவி ராமாநுஜ தமிழ்ப்பண்டித ரவர்கள் குமாரர் ஸ்ரீமான்
யதிராஜாசாரிய ரவர்கள் இயற்றிய
எழுசீர் அகவல் விருத்தம்.

புனிதமார் செந்தூர்ப் பாங்கிற் றளவாய்
புரத்துவாழ் வுறுகுண சீலன்
தனதனே ருயர்பண் டாரவே ளந்தவு
தனயனுந் திரவியப் பூமான்
மனதினி துவந்து வழங்கிய நீதி
நெறிக்குமி மாண்பினை யாரே
நனிதெடுத் திசைக்க வல்லுந ரிந்த
நானில மீதினின் மாதோ 1

இன்னநூற் கிணையாய் வள்ளுவர் குறளை
யியம்புது மோவது வன்றேற்
றன்னிக ரில்லா நாலடி நானூ
றதனையே சாற்றுவ மோயாம்
பன்னரு மிந்நூற் பண்புணர்ந் தச்சிற்
பதிவுசெய் துதவினன் சோவில்
நன்னகர் வாழ்வோ னலங்கொள்பண் டார
புடமென நவில்பதி யினனே 2

அன்பருள் சிறந்த ராமசா மிப்பே
ரண்ணலின் றெடுத்திடு மைந்த
னின்பமார் தருசீ ரியைந்தநற் பண்பன்
னிங்கித மோர்ந்திடு நிபுணன்

பொன்பயின் மருமன் றன்றிரு மகனைப்
போன்றழ கார்ந்தமெய் யுடையான்
மன்புகழ் திகழ்பாற் பாண்டிய னென்னும்
வண்மையன் றிண்மையன் மாதோ 3

மதுரை செயிண்ட் மேரி உயர்தர
கலாசாலைத் தலைமைத்தமிழாசிரியர்
உயர்திருவாளர்;

பண்டித

அ. முத்துசாமிப் பாவலர் அவர்கள்

இயற்றிய

அறுசீர் அகவல் விருத்தம்.

செந்தமிழின் பெருமையுழ வின்பெருமை
வாணிகத்தின் சிறப்பு செல்வந்
தந்தசெருக் குடன்கல்விச் செருக்குமிடி
யின்கொடுமை தகைமை சான்ற
இந்தியநாட் டின்பழைய நிலைபலவாங்
கட்சிமதத் தியங்கு கொள்கை
விந்தைமிகு படக்காட்சி யரசியல்போன்
றவைபலவும் விளங்கித் தோன்ற 1

காலத்துக் கேற்பநறுந் தமிழ்மொழியில்
தெளிநடையில் கவர்ச்சி கொண்டு
ஞாலத்தோர் படித்துணர நீதிநெறிக்
கும்மியொன்று நயந்த ளித்தான்

சீலத்தில் வாணிபத்திற் பலவகையாங்
கலையறிவிற் சிறந்து நின்றோன்
ஆலத்தை யுண்டமரர்க் காத்தபிரான்
சேய்அடிக்கே யன்பு பூண்டோன் 2

இல்லையென வந்தவருக் கில்லையென
தெப்பொருளும் ஈயும் வள்ளல்
எல்லவரும் புகழ்ந்துரைக்கும் இயல்புடையோன்
மாசற்ற இதயங் கொண்டோன்
வெல்லுதமிழ்ப் பற்றுடையோன் அதுபயின்ற
புலவர்கள்பால் விருப்ப மிக்கோன்
நல்லவர்கள் கூட்டுறவை நயக்கின்ற
திரவியப்பேர் நாவல் லோனே 3

அன்னவன்செய் நீதிநெறிக் கும்மியெனும்
பெயர்படைத்த அரிய நூலை
தன்னலமின் றிப்பலருங் கற்றுணர
அச்சிட்டுத் தகவாய்த் தந்தான்
மன்னவன்போற் பெருஞ்செல்வன் குறிப்பறிந்து
கொடைகொடுக்கும் மாண்பு பெற்றோன்
பன்னரிய புகழுடைப்பாற் பாண்டியநா
டாரென்னப் பகருங் கோவே 4

மதுரை, அர்ச்: மரியன்னை
உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்
உயர் திருவாளர் பண்டித,
மீ. கந்தசாமிப் புலவரவர்கள்
பாடிய

அறுசீர் அகவல் விருத்தம்.

உலகமுறு மலைமுதலாம் பலபொருளு
மகத்தடக்கி யொளிரு மெல்லின்
இலகுகதி ரெலாந்திரட்டிப் புலப்படுத்து
மாடியென வியம்பு கொள்கை
பலவகையுந் தொகுநீதி நெறிக்கும்மி
தனைச்செந் தார்ப் பக்கஞ் செல்வம்
நிலவுதள வாய்புரத்துத் திரவியப்பேர்ப்
பேரறிஞன் நிகழ்த்தி னானல் 1

பவளமுதற் றிரவியங்கள் பரவைபுகுந்
தெடுத்தவற்றின் பான்மை கூறி
யவரவர்முன் வைத்துயர்ந்த பொருள்குறித்துக்
கொண்மினென வறைதல் போலக்
கவர்படுபல் கொள்கைகளுங் குறித்தவற்றி
னுயர்கொள்கை காட்டி யிந்நாள்
தவறில்வழி புலகுசெல நீதிநெறிக்
கும்மியிவன் தந்தான் மாதோ 2

நாவலவன் மருத்துமணி மரியசிங்கக்
கவிஞனுயிர் நண்பன் நான்கு
பாவலவன் வணிகமணி பலகலைதே
ருயர்புலவன் பழன மெங்கும்
மாவலவன் வதிதளவாய் புரக்குரிசில்
திரவியக்கோன் வழங்கு நூலைக்
காவலவ னிகருயர்பாற் பாண்டியனச்
சகத்தேற்றிக் களித்தான் வாழி 3

இந்நூலாசிரியரின் சகோதரர் உயர்திருவாளர்
சி. ப. பொன்னுச்சாமி நாடாரவர்கள்
இயற்றிய
நேரிசை வெண்பா.

ஓதிநெறி நல்கு முயர்பொருளே லாநிறைந்த
நீதிநெறிக் கும்மி நிகழ்த்தினனல்—மாதிடமார்
போதன் றனையன் புகழ்திரவி யப்பூமான்
பாதந் தலைக்கணிவைப் பாம்.

கோவிற்பட்டி, போர்டு உயர்நிலைப்பள்ளித்
தமிழ்ப்பேராசிரியர், வித்துவான்:

வெ. முத்துராக்குக் கோனர்

அவர்கள் இயற்றிய

அறுசீர் அகவல் விருத்தம்.

சொல்லரிய வளங்குலவு சீரலைவாய்
மருங்கமைந்து துலங்கு மேன்மைச்
செல்வருறை யுந்தளவாய் புரப்பதிசெய்
நற்றவத்தாற் செனித்த மேலோன்
பல்வகைய நன்னலமும் இல்வாழ்க்கைப்
பண்புகளும் படியப் பெற்றேன்
நல்வணிகஞ் சிவகாசி ராசபா
ளையங்கோவில் நகரிற் செய்வோன் 1

வள்ளுவர்நூ லாதிபல நூலினுள
வரும்பொருளை வண்மை யாக
உள்ளபடி தெரிந்துணர்ந்து முலகியலை
நன்குணர்ந்து முண்மை யோர்ந்தும்
தெள்ளுதமிழ் நீதிநெறித் திரவியத்தைச்
செழுங்குமியால் திரட்டித் தந்தான்
வள்ளல்திர வியப்பெயரோன் வாழ்வீரிஃ
தறிந்துலகீர் மகிழ்ந்து மாதோ 2

மையாடுங் கண்ணியர்கள் மடல்வரையும்
வனப்பனுயர் வண்மை வாய்த்தோன்
பையாடு மரவணிந்த பசுபதியின்
பதம்பணிவோன் பண்பால் மிக்கோன்

மெய்யானவிந்நூலே யச்சியற்றி
யருள்கூர்ந்தான் விரும்பி னோர்க்குக்
கையார்ந்த நிதிதருபாற் பாண்டியப்பூ
மானறிஞர் களிக்கத் தானே 3

சிறப்புப் பாயிரம்

விருதுநகர் க்ஷத்திரிய வித்தியா சாலையில்
தமிழ்ப்பண்டிதராயிருந்தவரும்
வண்டானம், கோவிற்பட்டியில் வாழ்பவருமான
தமிழ்ப் பெரும்பாவலர்

மரியசிங்க நாடார் அவர்கள்

இயற்றிய

அறுசீர் அகவல் விருத்தம்.

பூப்பாவை யுறைமார்பன் பொற்றளவாய்
புரத்துதித்தோன் புகழ்சீர் செல்வந்
தேம்பாமல் வளர்தருபேர் வாழ்வுடையான்
றன்பெயரின் சிறப்பிற் கேற்பக்
கூம்பாமல் விளங்கிடுசீர்த் திரவியம்பொன்
பெற்றுயர்ந்த கோமா னென்றுஞ்
சோம்பாதான் நீதிநிறை பண்டாரத்
துரைதவத்தாற் றோன்றி னேனே 1

சீருலவு செந்திலணித் தாந்தளவாய்
புரந்தனிற்சீர் செழிக்க வாழ்வோன்
காருலவு சோலைசெறி கவின்கோவிற்
புரியில்வணி கஞ்செய் தோங்கும்
பேருலவ வாழ்கோமான் ராசபா
ளையந்தனிலும் பிறங்கு சீர்மை
ஏருலவு சிவகாசிப் பதியிலும்வா
ணிகநிலைய மியக்கு மேலோன் 2

பலகலையும் பயின்றுயர்ந்தோன் பற்றலரா
மிருட்கிரவி பகர்பொற் செல்வன்
இலகுமுரம் பொறைகருணை மெய்ம்மையறி
வொழுக்கமுய ரீகை யாதி

II

நிலவுபெருங் குணங்களெலா மோருருவாய்த்
திரண்டனைய நீர்மை யாளன்
உலகியலு நூலியலு மோர்ந்துறுதி
வீரமிக வுடையான் மன்னோ 3

கற்றவர்தங் கனமறிவன் கனிமதுர
வாக்குடையான் கதித்த மேன்மை
நற்றவர்தம் பற்றுடையான் நவில்யோகம்
பயில்பெரியோன் நல்லோர் நேயன்
மற்றவர்க்கு மருந்தெனினும் வழங்கியுணும்
வண்மையுளன் வனசை மார்பம்
பெற்றுடையா னிரவறியான் பெருந்திருவார்
திரவியப்பேர் பெறுபூ மானே 4

இத்தகையா ருத்தமனோர் நீதிநெறிக்
கும்மிதனை யியற்றி னானிவ்
வித்தகனன் னூற்பெருமை யுரைப்பவரார்
நீதியெலாம் விளம்பிப் பின்னும்
மெத்தமத குலவிகற்ப மறவுரைத்தான்
சுதந்திரமே வியதும் விண்டான்
பித்தமென வுளமயக்கும் பிறவடிமை
தமிழடிமை பேசி னானே 5

மருத்துவத்தி னிலைகலைகள் பயின்முறைக
ளாதனமா மதியே கொண்ட
பொருத்தமிலாப் புலவர்செயல் புகன்றுகலை
மாதுதிரு பொருந்தா ரென்றல்
அருத்தமிலை யென்றுரைத்தா னரியத்திற்
றமிழ்சிறந்த தாகு மென்றான்
பெருத்தபழம் பெருமையுடன் பெண்ணியலும்
பேசினனிப் பெரியோன் மாதோ 6

III

பொதுவுடைமை தனியுடைமை முரணுரைத்தான்
பொருட்செல்வர் புன்மை கூறிக்
கதுவுறுவன் மிடிக்கொடுமை கலேபதவிச்
செருக்குநனி கழன்ருஞட்டில்
முதிர்கலக மடிமையுற்ற வழிதேசப்
பிரிவினையின் முறைசொற் றேந
மதுகுடிமா வரசினது சுமையுடனே
ரோப்பியர்தம் மறம்விண் டானே 7

செய்யதிர விடர்கழகச் செயலுரைத்தா
ஞரியர்தந் தீமை செப்பி
வெய்யபகை முகம்மதியர் விளைத்தன்முறை
யன்றெனவும் விளக்கந் தந்தான்
ஐயமிலா தேசிந்து மதத்தாறி
யாமைசொண ஞறைப டத்தின்
மையலுடன் மாணவர்தந் தகைவிவசா
யத்தினலம் வழுத்தி ஞனே 8

வர்த்தகர்நற் சமரசர்தே சியர்முக
மதியரிந்து மன்றத் தார்தம்
புத்தியலும் பழவியலு நலந்தீதும்
புகன்றனனிப் புனித நாடு
மெத்தவுயர் வழிகழன்றுன் மெய்யறிவு
ஞானமுண்மை விளம்பி வாழ்வு
வித்தகமுள் குருயோக விதமின்பம்
நிட்டைநிலே மிழற்றி ஞனே 9

பாவனைது றத்தன்மவு னஞ்சாந்தி
யன்பறிவு பகர்ந்தா னிந்நூல்
தேவமுதோ கற்பகத்தின் செழுங்கனியோ
வெனப்புலவர் செப்பு வாரிப்

பூவதனி லிதைமறுப்போர் மனச்சான்றை
மதியாராம் புதுநூல் செய்திங்
நாவலவ னறிஞரெலாம் வியந்திடவே
புகழ்க்கம்பம் நாட்டி னானே 10

செஞ்சாலி விளைபழனப் பண்டார
புரத்துதித்த செல்வன் வாணி
பஞ்சாலி ராமசா மிப்பூமா
னிளையசுதன் பற்றுள் ளோர்க்கு
மஞ்சாலி பெயனிகர நலம்புரிவோன்
மலர்முகத்தோன் வயங்கூர் வல்லோன்
விஞ்சாலிற் குடிதழைக்கப் பயனிறைந்த
வாழ்வுமிகு மேலோன் மாதோ 11

பெருகுவளஞ் செறிகோவிற் புரியுறைவோன்
றிருநிறைந்தோன் பெரியோ ரின்சொற்
பருகுவளந் திகழ்வடிவன் ராமசா
மிப்பெயர்விள் படச்சா லைக்கோன்
தருகுவளந் துண்டவனோர் பாற்பாண்டி
யக்கோமான் றனிந் நூலாம்
முருகுவளந் தந்தெனவச் சியற்றியுத
வினன்பெருமை மொழிதற் பாற்றே.

முகவுரை.

1. புவியினுக்கு அணியாய் விளங்கும் நம் பாரத நாடு பழம் பெருமையுடையது. இந் நாட்டுக்குத் திலகமெனப் போற்றப்படும் நம் தண்டமிழ் நாடு கல்வி, செல்வம், வீரம், வண்மை முதலிய நற்பண்புகளமைந்த சான்றோருடையது. அதிலும் தென் பாண்டி நாடு கல்விக்கும், கலைகட்கும் உறைவிடமாய் விளங்கி வருவது. பண்டும் இன்றும் இத்தகைய பெருமையுடன் விளங்கி வரும் இத்தென்பாண்டி நாட்டில், நெல்லையம்பதியைச்சார்ந்த, செந்திலம்பதியை அடுத்துள்ள சாத்தான்குளத்தைச் சேர்ந்த தலைவாய்புரத்தில் சிறக்க வாழ்ந்து வரும், பண்டார நாடார் என்பார்க்கு அருந்தவமகனாகப் பிறந்து கல்வி, கேள்வி, ஒழுக்கம் சான்று, முன்னோர் வழியே வாணிகமியற்றி, இப்பொழுது கோவிற்பட்டியில் உறைந்து அவ்வணிகத் தொழிலே புரிந்து வரும் அன்பர் சி. ப. திரவிய நாடார் அவர்கள் செந்நெறி நின்று வாழ்பவர் ஆவர். அவ்வாறு நிற்றலுக்கோர் எடுத்துக் காட்டாக விளங்குவது அன்னாரியற்றிய **"நீதி நெறிக் கும்மி"** என்னும் அழகிய நூல்.

2. மிகப்பழமையான காலமுதல் நம் தமிழ் நாட்டில் ஆங்காங்கு அறிவிற்சிறந்த பெரியார்

பலர் இல்லறை காய் போல நின்று வாழ்வு நடாத்தி வந்திருக்கின்றனர். அவர்களை நாம் கூர்ந்து கவனித்துத் தெளியவேண்டுமே தவிர, அவர்களே முன் வந்து தங்களைப் பலரும் அறிய வெளிப்படுத்திக் கொள்ளார். விளம்பர உலக-மாய் அமைந்த இக்காலத்தில் இத்தகைய அருங் குணம் அமைந்து, பணியுமாம் என்றும் பெருமை என்னும் வள்ளுவர் பெருமான் வாக்கிற்கிலக்காகத் தன் கடனாற்றித் தனித் தமிழ்ச் சுவை நுகர்ந்து பெருமிதமனமுடையராய் வாழ்ந்து வரும் அன்னார் குணநலம் நம்மனோரால் மிகவும் பாராட்டுதலுக் குரியதாகும்.

3. நம் செந்தமிழ் இலக்கியத்தில் தமிழர்தம் நற்பண்புகளையெல்லாம் தெள்ளிதின் விளக்கிப் போந்த 'புறநானூறு' என்னும் அழகிய சங்க நூலில் பாடிய புலவர்களாக விளங்குபவர்-பலர். அவருள் பழுத்த கல்வியும் விழுத்தகு கேள்வியும் அமைந்து தமிழின்பம் நுகர்ந்து, பற்பல தொழில்களிலும் ஈடுபட்டுள்ள புலவர் பெருமக்கள் பலர் காணப்படுகின்றனர். அவருள் 'கூல வாணிகன் சாத்தனார்' என்பார், புலவரும், புரவலரும் போற்றும் புகழமைந்து, பலவகைத் தானியங்களையும் கொண்டு சேர்த்து பொருளீட்டுந் தொழிலுடையோராய் விளங்கிவந்தனர் என்று

காண்கிறோம். அத்தகைய நல்லார் வழிவந்த நம் தமிழர் மரபில் இன்னும் அவ்வாணிகத் தொழில் புரிந்து தமிழ் நலங்கனிய வாழ்தல் வியப்பல்ல.

4, இனி அன்னாரியற்றிய 'நீதி நெறிக் கும்மி' என்னும் நூலைப் பார்ப்போம். அது கடவுள் வாழ்த்து, வழிபடு கடவுள் வணக்கம், அவையடக்கம், நூற் காரணம், தமிழ்த்தாய் வாழ்த்துக்களைக் கொண்டு, 'ஆலயங் கண்டு தொழவேண்டும்' என்று தொடங்கிக் கூறப்படும் முப்பத்தைந்து கண்ணிகளிலும் அரும்பெரும் கருத்துக்களை எளிய முறையில், யாவரும் படித்துப் பயனடையுமாறு கூறுவதாம்.

5. அடுத்து. மதம், சாதி, அரசியல் சுதந்திரம், தமிழின் நிலை, கலைபயில் முறை, நூதனப்புலவர், மலர்மகளும் கலைமகளும், ஆரியமும் தமிழும், பெண், மிடியின் கொடுமை, பதவிச் செருக்கு, பாரத நாட்டின் பழங்காலநிலை, பாரதக்குடியரசு முதலிய தலைப்புக்களுடன் அறிவறிதல் ஈறாக ஐம்பத்தாறு தலைப்புக்களில் இக்காலத்துமக்களுக் கேற்றஅருங்கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. முடிவாக உலக வாழ்த்து, பாரதநாட்டு வாழ்த்து தமிழ் நாட்டு வாழ்த்துடன் முற்றுப்பெறுகின்

றது.

6. இவற்றில் சொல்லப்படும் நற்கருத்துக்களை யெல்லாம் தனித்தனி விளக்கப்புகின் உரை பெருகும். ஆதலின் ஆங்காங்கு ஒரு சிலகூற விரும்புகிறேன்.

I. **மதம்:-** பற்பல பெயர் கொண்ட பணிகளும் ஒரே வகைப் பொன் கொண்டிழைத்தல் போல உலகிலுள்ள பற்பல மதங்களும் ஒரே கடவுளைத் தலைமையாகக் கொண்டன. ஆறுகள் பலவும் பல இடங்களில் தோன்றினும் முடிவில் சமுத்திரம் ஒன்றையே சார்வன போல, பற்பல சமயங்களும் முடிவில் பரம்பொருள் ஒன்றையே அடைவன என்னும் கருத்தும், பசுக்கள் பலநிறங் கொண்டனவேனும் அவைதரும் பால் வெண்மை நிறமாயிருத்தல் போல, பல மதங்கள் கூறும் பொருள் ஒன்றே என்னும் கருத்தும் எவ்வளவு பொருத்தமான விளக்கமாகும்.

II. **சாதி:-** இந்நாட்டில் சாதிப் பிரிவு காரணமாகவும், சமயப்பிரிவு காரணமாகவும் ஏற்பட்ட பல இன்னல்களையும் நாம் அறிவோம். நம் பாரத நாடு சுதந்திரமடைவதற்கும், பெற்ற சுதந்திரத்தைக் காப்பதற்கும் தடையாகக் கூறப்படும்

சாதிப்பிரிவுகளும் அதுபற்றிய உயர்வு தாழ்வு களும் நீங்கி ஒற்றுமையுடையாராய் வாழ வேண்டுமானல், தாழ்ந்தோரைக் கல்வி, செல்வ நிலை முதலிய வற்ருலுயர்த்திக் கலப்பு மணம் பெற்று வாழவேண்டும் என்கிருர் ஆசிரியர். இச் சீரிய கருத்து இக்காலத்திற்கும் தேசநலனுக்கும் ஏற்ற தொன்றேயாம்.

III. தமிழின் நிலை:- ஆங்கிலேயர் ஆட்சியில் மோகங் கொண்டு மறந்து கைவிடப்பட்ட நம் தமிழன்னைக்குச் சுதந்திர நாட்டில் தன் பழமை நிலை ஏற்பட வழியில்லையேல் தமிழ் மக்கள் எப் படி சிறப்புற முடியும் என்று கேட்டு, தமிழில் உள்ள கலைகளை உலைத்துத் தமிழ் ஓங்க உழைப் போம் என்பாரின் அறியாமைக்கு ஆசிரியர் வருந்துவது நம்மனேர்க்கு உணர்ச்சி யூட்டு வதாகும்.

IV. கலைபயில் முறை:- என்னுந் தலைப்பில் நம் செந்தமிழிலுள்ள பற்பல கலைகளையும் கற்றுத் தெளிந்து, பலதேசங்களிலும் விளங்கும் புதுக் கலைகளையும் பயின்று நம் நாட்டினர் கலைவாணர் களாகவும் தொழில் மன்னர்களாகவும் திகழ வேண்டும். வள்ளுவர் நூலமுதையும், வான் புகழ்க் கம்பன் காவியக் கனியையும், எம் இளங்

கோவார் வகுத்த தெள்ளுதமிழ்ச் சிலப்பதிகாரத் தேனேயும் திருத்தக்க தேவரியற்றிய சிந்தாமணித் தீஞ்சுவை மதுவையும் மாந்தித் தமிழர் வாழ்வாராக, எனக் கூறி நம்மனோர்க்கு அறிவுறுத்துகின்றார்.

'நூதனப்புலவர்' என்னுந்தலைப்பில் கூறப்படுவன நாம் படித்துப் பாராட்டக் கூடியதாகும்.

V. மலர்மகளும் கலைமகளும்:- என்னுந்தலைப்பில் "திருமகளாகிய லெட்சுமியும் கலைமகளாகிய சரஸ்வதியும் ஓரிடத்தில் பொருந்தி வாழார். ஏனென்றால் அவர்கள் மாமியும் மருகியும் ஆம் முறையினர்" என்று ஒரு பழமொழி நம்நாட்டில் வழங்குவதைக் காணலாம். இது எவ்வாறு பொருத்தமிலாக் கூற்று என்பதை ஆசிரியர் விளக்குவதைக் காண்க.

அறிவைக் கலைமகள் எனவும் செல்வத்தை இலக்குமி எனவும் நம் முன்னோர் கற்பித்துக்கூறினர்.

கலைமகள் மாமியுறையும் நிறை செல்வரிடம் சேராள் என்றால் செல்வரெல்லாம் அறிவற்ற மூடர்களா? அறிவற்றவரேல் அவர்கள் எங்ஙனம் தொழிலில் வளம் பெறுவர்? தம்பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்புவோர் செல்வத்தைப் பேண விரும்பிலரா? என்று கேட்டு, உண்மையில்

பெருங் கல்வியாளர் மற்ரேரை மகிழ்வித்து அவர்கள் கொடுக்க வாங்கியுண்ணும் வாழ்க்கையைக்கொண்டனர். தங்களுக்கென வளந்தருந் தொழிலைக் கைவிட்டனர். ஆதலால் மிடி பெற்றனர். புலவர்கள் வறுமையடையக் காரணம் இதுவே. பண்டு இந்நாடாண்ட முடிமன்னர் பலர் செல்வத்தில் சிறந்து, கலைபல பயின்று கன்னல் அமுதமெனக் கவிகளியற்றினர். அவர்களிடம் மலர்க் கன்னியர் கூடிமகிழ்ந்து வீற்றிருக்கவில்லையா? என்று கூறி அப்பழமொழியைக் கண்டிக்கின்றார்.

இதன் கருத்து என்ன? மக்கள் திறமையுள்ள கலையுள்ளம் படைத்துத் திருப்பெருகும் செயலுடையாராய் வாழவேண்டும் என்பதல்லவா?

6. **ஆரியமும் தமிழும்:-** ஆரியம் தெய்வமொழி; அதிலிருந்துதான் தமிழ்மொழிதோன்றியது என்பார் கூற்று எவ்வளவு பொருத்தமிலாப் புன்மொழி என்பதை ஆசிரியர் நன்கு விளக்கிக் காட்டுகின்றார். அவற்றின் விரிவை நூலில் படித்து மகிழ்வாராக.

அவற்றுள் **1. ஓம் என்ற பிரணவாட்சரமே உயிர் எனவும் நவசிவய என்ற ஐந்தெழுத்துமே உடல் எனவும் இருமொழியுங் கூறுகின்றன**

ஓம் நமசிவய என்னுந் தமிழ் எழுத்துக்களைப் பொருத்தினுல் மனித உடலாகும் பிரணவவடிவனுன விநாயகப் பெருமான் வடிவத்தைத் தமிழ், ஓ, குறிக்கும்.

இவை நம் செந்தமிழ் எழுத்துகட்கு அல்லாமல் ஆரிய எழுத்துகட்கு அமையுமோ என்று கூறி, ஐந்திலக்கண அமைதி கொண்டு விளங்கும் நம் பைந்தமிழைப் பார்புகழப்பாடுவோம் என்று எக்காளமிடுகிருர் ஆசிரியர்.

VII. இனி, இந்நூலிற் கூறப்படும் அரும்பொருள் பற்றி வரைந்து கொண்டே செல்லின் மிகைபடக் கூறுவதாகும் என்றே எண்ணுகிறேன். அறிஞர் உலகம், இளைஞர் உலகம், என் தமிழுலகம் இந்நூற் கருத்துக்களை ஏற்று நலம் பெறுவதாக. இந்நாடு எந்நாட்டவராலும் மதிக்கப்பெறுவதாக. இந்நூலிற் கூறப்படும் ஒவ்வொரு விஷயமும் அசைக்க முடியாத உரனுடையதே.

இந்நூலாசிரியர் வாக்கின்படி

'கண்டதை யோர்தல் புலனறிவே, புலன்
காணுதும் ஓர்தல் பகுத்தறிவே
விண்டற்கு அரியதோர் மெய்ப்பொருள் ஓர்வது
மெய்யறி வென்ன விளம்புவரே'

என்றுகூறி எனது முன்னுரையை முடித்துக் கொள்ள விரும்புகிறேன்.

8. இத்தகைய அரும் பெருங்கருத்துக்கள் அமைந்த இந்நூலைத் தமிழ் நாட்டார் பெற்றுப் பயனடையுமாறு நல்ல முறையில் அச்சிட்டு வெளிப்படுத்திய இந்நகர் ராமசாமி சினிமா தியேட்டரின் உரிமையாளர் அன்பர்: திரு. ப. க. ரா.

பால்பாண்டிய நாடார் அவர்களின்

தமிழபிமானமும், அறிஞரைப் போற்றும் மனமுங்கண்டு மிகவும் மகிழ்கின்றேன்.

9. இந்நூலாசிரியர் அன்பர்:

சி. ப. திரவிய நாடார் அவர்கள்

தமிழ்த்தாய்க்கு மேலும் பல இலக்கியப் புத்தணி புனைந்து இலட்சிய புருஷராக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

10 இதனை எழுதுவதற்கு ஆர்வமும் ஊக்கமுங் கொடுத்த எனதன்பர் தமிழ்ப்பெரும் பாவலர் **மரியசிங்க நாடார் அவர்கட்கும்** நூலாசிரியர் அவர்கட்கும் எனதன்பும் வணக்கமும் உரியதாகும்.

இங்ஙனம்,

வித்துவான்: S. G. மதுரைநாயகம் பிள்ளை,
சீனியர் தமிழாசிரியர்.

போர்டுஉயர்நிலைப்பள்ளி,

கோவில்பட்டி,
12—5—50.

ஆக்கியோன் நன்றியறிவிப்பு.

எனது இச்சிறியநூலைப் பெரிதும் போற்றி முக வுரை, சாற்றுக்கவிகள் உதவிய தமிழ்ப்பெரும் புலமை சான்ற வித்துவான்களுக்கும்,

இந்நூலைத் திருத்தி யுதவியவரும், வைத்தியவிற் பன்னரும், தமிழ்ப்பெரும் பாவலரும், எனது ஆரு யிர் நண்பருமான திருவாளர், **மரியசிங்க நாடார் அவர்களுக்கும்,**

இந்நூல்மீது ஆர்வம் மிகுந்து அச்சியற்றி வெளி யிட்டவரும், பிரபல வர்த்தகரும், இராமசாமி தி யேட்டர் அதிபரும், எனது ஆப்த நண்பருமான திரு வாளர் **ப. க. ரா. பாற்பாண்டிய நாடார் அவர்களுக்கும்** எனது மனமார்ந்த நன்றியும், வந்தனமும் உரித்தாகுக.

ஆசிரியன், திரவியம்.
கோவிற்பட்டி.

பதிப்பாளர் முன்னுரை

அமிழ்தினு மினிய தமிழ்மொழியே அநாதியான உயர்தனிச் செம்மொழியாகும். இதுவே பலமொழிப் புலமைசான்ற அறிஞர்கள்கண்ட முடிவு. எந்நாட்டறிஞரினும் முன்னுட்டும் பெருமை மிக்கார்இந் நாட்டறிஞர்களேயாவர். கல்வித்துறை அறிவுத் துறைகளின் வரம்புகண்டவர்கள். இகபர வாழ்வின் வெற்றிக்காதாரமாகிய ஒழுக்கத்தின் வரப்பு வகுத்தவர்கள். பழந்தமிழ் நூல்கள், சரித்திரம், சிற்பம், சிலாசாசனம், பிறநாட்டு யாத்திரீக அறிஞர்கள் கூற்றுக்கள், ஆகியவை இதற்குச் சான்று பகர்கின்றன.

கற்றுயர்ந்த பெரியோர்கள் தம் வாழ்க்கையில் அறிவாலும் அனுபவத்தாலுங் கண்ட உண்மைகளைப் பிற்காலத்தார் அறிந்து பயன் பெறும் வண்ணம் நூல்களாக்கித் தந்து சென்றனர். அவைகளில் மண், நீர், தீ, சிதல், ஆகியவைகளாலும் மக்கள் அறியாமையாலும் அழிந்தவை மிகப்பல. எஞ்சியவைகளும் பிறமொழி மோகங் கொண்ட மக்களாற் புறக்கணிக்கப் பட்டு உள்ளன. தாய்மொழி அன்பும், அம்மொழியறிவுமில்லாத மக்களோ நாடோ சிறந்து விளங்குவது அரிது. பிறரையோ பிறமொழிகளையோ, பிறகலைகளையோ கௌரவிப்பது பெருந்தன்மைதான். மற்றவைகளிலுள்ள அரும்பெரும்விஞ்ஞைகளைக்கற்பதும் யாவரும் உணரும்படி மொழிபெயர்ப்பதும் மிகமிக அவசியமே. ஆனால் தம் தாய் மொழிமாண்புணராமல் அதற்கு அவமதிப்பு உண்டாகும் முறையில் மற்ற மொழி

களுக்கு ஏற்ற மளிப்பது இழிதகைமையே யாகும். தாய்மொழியை நன்கு பயில வேண்டும். வேறுபல மொழிகளையுங் கற்கவேண்டும். அவைகளிலுள்ள அரியநூல்களையும் அரும்பொருள்களையும் கற்றுத் தமிழிலாக்கித் தமிழை அலங்கரிக்கவேண்டும். தமிழின் மாண்பை மற்ற நாட்டவர் உணர்ந்து வியக்கும்படி செய்தல் வேண்டும். இதுவே தமிழர் கடமையாகும். இம்முறையை விட்டுப் பிறமொழியில் தமிழன் கலைப் பிச்சை பெறுவது அவமானமாகும். பெற்றதாய் பசித்திருக்கப் பிராமண போசனம் நடத்தும் மகனைப்போலவே நமது அரசும் மக்களும் இப்போது நடந்து வருகிறார்கள்.

தம்மொழியிலும் மேலாகப் பிற மொழிகளை மதித்துப் போற்றுவதே தமிழர் வழக்கமாகத் தெரிகிறது. உதாரணமாக, ஆதியில் ஆரியத்தைத் தெய்வ மொழியெனக் கருதிப் போற்றிவந்தனர். அதன்பின் ஆங்கிலத்தை அரசமொழியெனக் கற்றுப்போற்றிவந்தனர். வருகின்றனர். இனி இலக்கியவளமற்ற இந்தியைத் தேசமொழியெனக் கற்றுப்போற்றுவர். கண்ணில்லாக் குழந்தைகள் போல் பிறர் காட்டியவழியிற் சென்று மாட்டிக் கொள்ளும் பேதைமையைத் தமிழ் மக்கள் என்று நீக்குவார்களோ தெரியவில்லை. முன் ஆங்கில ஆட்சியினர் பழிக்கஞ்சிக் கலாசாலைகளில் தமிழைப் பெயரளவில் பாடமாக வைத்திருந்தனர். அரசியல் சுதந்திரங்கிடைத்தால் மொழிச்சுதந்திரமும் கிடைக்குமென எதிர்பார்த்தோம். சுதந்திரம் வந்தபின், உள்ள தமிழ்ப் பாடமும் குறைந்து போயிற்று. குறைந்துகொண்டே வருகிறது.

முன் ஆங்கிலத்திற்குத் தமிழ் தொழும் பாயிருந் தது. இன்று ஆங்கிலம் இந்தி இரண்டுக்குந் தொழும்பாகிறது. இன்னும் எத்தனை மொழிகட்குத் தமிழ் தொழும் பாகுமோ தெரியவில்லை. மேற் கண்ட மொழிகள் வேண்டாமென்று சொல்ல வில்லை. அம்மொழிகளிற் பாடம் நீண்டு கொண் டும் தமிழ்ப்பாடம் குறைந்து கொண்டும் வந் தால் முடிவில் எப்படியாகுமென்றுதான் அஞ்சு கிறோம். அதிலும் சுதந்திர அரசாங்கம், சுதேச மந்திரிகள், தமிழ்நிர்வாகிகள் ஆட்சியில் இவ் வண்ணம் நடப்பதென்றால், நாம் வருத்தத்துடன் வெட்கப் படவேண்டியதே.

தாய் மொழிக்கு முதலிடந்தந்து அதன்பின் பிற மொழிகளைப்பயிலவேண்டும் என்னும் உணர்ச்சி மக்கள் இதயத்தில் எப்போதுவேரூன்றி வளரு மோ அப்போது தான் தமிழர் தமிழராக விளங்க முடியும். அந்நிலை விரைவி லெய்தும்படி எல்லாம் வல்ல இறைவன் இன்னருள் புரிவானாக.

எனது ஆப்த நண்பரும், சிறந்த தமிழறிஞரு மான திருவாளர் **சி. ப. திரவிய நாடாரவர் கள்** கலையறிவுடன் பாவியற்றும் ஆற்றலும் படைத்தவராய், வர்த்தகம் புரிந்து கொண்டு இலைமறை காய்போல் வாழ்க்கை நடத்துபவர் கள். இவர்கள் பலதுறைகளிலும் பாடியபாக்கள் மிகப்பல. அவைகளுள் இக்கும்மியும் ஒன்று. எனக்குத் தமிழிற் போதிய பயிற்சி யில்லாவிடி னும் இந்நூல் மிகச்சிறந்ததாக என்புத்திக்குத் தோன்றியது. இதைக்கண்ணுற்ற வித்துவான் களும் அவ்வாறே கருதினர். ஒருசிறந்த அறிஞ ருடைய பாடல் வடிவத்தமைந்த சீரிய கருத்துக்

களைப் பொதுமக்களுக்கு அறிவிப்பது எனது கடனெனக் கருதி இந்நூலை வெளியிட்டேன்.

நீதியொன்றையே பற்றுக் கோடாகக் கொண்டு விருப்பு வெறுப்பற்ற சமநிலை நின்று இதனைப் படித்துச் சிந்திக்கும்படி தமிழ் மக்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,

ப. க. ரா. பாற்பாண்டிய நாடார்,

கோவிற்பட்டி.

ஓம்.

நீதி நெறிக் கும்மி.

காப்பு

கலிவிருத்தம்.

சீத நீர்வயி னென்னத் திகழ்தரு
பூத பூதியந் தோறும் பொருந்திய
போத பூரணற் போற்றிப் புகலுவாம்
ஓது நீதி நெறிக்குமி யோங்கவே

அவையடக்கம்

அறுசீர் அகவல் விருத்தம்.

தண்மைமழை பொழிநீரைத் தருவேற்றுப்
பின்பொழியுந் தகைமை போலும்
அண்மையுளா ருரைத்தமொழி கேட்டபசுங்
கிள்ளையச்சொ லறைதல் போலும்
உண்மைமிகு வள்ளுவர்நூ லாதிபல
நூலுணர்ந்த வரவோர் முன்னர்
எண்மையிலா துரைத்தமொழி யிளங்குழவி
மழலையென ஏற்பர் மாதோ

நூல் செய்த காரணம்

நாடுமொழி மக்கள்புவி வாழ்த்தவுயர்
வளமனைத்தும் நண்ண வுள்ளங்
கூடுவிழை வாலுமொரு சிலர்பெயருஞ்
சுயநலமுங் குறியாய்க் கொண்டு
கேடுபல மக்களுககுச் செய்யுமிழி
நிலைநீங்கக் கிளரன் பாலும்
நீடுதமிழ்க் கும்மிசொற்றேன் பழிபிறரைப்
பகரநெஞ்சில் நினைத்தி லேனே

ஓம்.

மெய்ப் பொருள் வணக்கம்

எழுசீர் அகவல் விருத்தம்.

ஆதியா யகில புவனமு நிறைந்தே
யளவிடற் கரியதா யனந்த
ஓதியா யுள்ள தில்லெனற் கரிய
ஒன்றதா யுணர்வினுக் குணர்வாய்ச்
சோதியாய் நசைமூன் றறுத்தவ ரறிவிற்
சுரந்திடு மின்பவா ருதியாய்
நீதியாய் நெறியாய் யாவுமாய் நிலவும்
நிமலனை நினைந்திறைஞ் சுவமே

வழிபடு கடவுள் வணக்கம்.

கும்மி

ஆர்தரு மானந்த வாருதி யாமயில்
அங்கையன் செந்தமி ழாதரத்தன்
சீர்தரு மென்குரு தேசிக னரணி
செந்திற் குமரனை வந்திப்பமே

தமிழ் வணக்கம்.

தித்திக்கும் பாகமு தின்கனி பால்செழுந்
தேனிவை வென்று திகழ்மதுர
முத்தமிழ்த் தாயை வணங்குது மேகவி
முட்டின்றி யோங்கு முறைபெறவே,

நூல்

ஆலயங் கண்டு தொழவேண் டும்முளத்
தாதியைப் பாவித் திடல்வேண்டும்
சீலந் தருமறி வாற்செயல் செப்புளந்
தேறித் தெளிந்திட வேவேண்டும் . 1

கள்ளுடன் சூதுபொய் காமங் களம்வஞ்சம்
காதக மின்னன தள்ள லுடன்
உள்ளது கொண்டுபே ராசையில் லாதுநல்
உத்தம ராயிங்கு வாழுவமே 2

தேசத்தின் நன்மைக் குழைத்திடு வோந்தெய்வ
பூசனை யென்றும் புரிந்திடுவோம்
வாச மனைமக்கள் தம்மை முறைப்படி
வாழ்க்கை வழியிற் செலுத்துவமே 3

சத்தியஞ் சொன்னிலை சாந்தமுங் கொண்டுபல்
சாதி மதபேதந் தள்ள லுடன்
எத்தொழி லுஞ்சித்தி செய்திடு வோமதி
லேதமில் லாத தியற்றிடுவோம் 4

கைத்தொழி லைவிர்த்தி செய்துவிஞ் ஞானக்
கலையி னிலையினைக் கண்டறிவோம்
நித்தம்பல் வித்தைகள் கற்றுமெய்ஞ் ஞான
நிலையறிந் துள்ளம் நிலைபெறுவோம் 5

தந்தைதன் சொற்றலை மேற்கொளு வோம்பெற்ற
தாய்தனைப் போற்றியே வாழ்ந்திடுவோம்
சிந்தை யொருப்பட்டுச் செய்யுந் தொழில்கள்
சிறக்க வுளத்தி லுரம்பெறுவோம் 6

தேக முடைசுத்தஞ் சிந்தை செயல்சுத்தஞ்
செப்பு முரைசுத்தஞ் சேர்வதுடன்
சோக மிலாதுளச் சாந்தி மணமலர்
சூடுவஞ் செந்தமிழ் பாடுவமே 7

காலைத் துயிலெழு வோமே பழுதறக்
கற்றவர் சொற்சிரங் கொள்ளுவமே
சாலும் பலவறந் தம்முட் சிறந்துள
தானஞ்செய் துய்வந் தரைமிசையே 8

நிறையறி வோர்ப்புக் கடைப்பிடி யாங்குணம்
நீடணி யாடவர்க் கின்னகொண்டே
பொறையெனுந் தாயைப் புரந்தாசைப் பூதத்தைப்
போக்கிமெய்ப் போதமே பூப்போமே 9

புறன்பொய் கடுமை விலக்கி நிறைபயன்
பூக்கு மொழிகள் புகன்றிடுவோம்
அறனற்ற செய்கைக ளின்றியென் றும்பிறர்
அத்தநஞ் சென்றுள மஞ்சுவமே 10

குற்றம்விட் டுக்குணங் கொண்டு குறிப்புணர்
கூர்மதி யாளரைக் கூடுவமே
சிற்றினஞ் சேரல் விடுவோ மேசித்தந்
தேறிச் சிறந்து திகழ்வோமே 11

கால மிடம்பொருள் பக்கந் துணைவலி
கண்டு கருமங் கொளன்முறையே
கோலங்கண் டேநிலை பேரா ருறவினைக்
கோடி கொடுத்துங் கொளலுயர்வே 12

சோம்பல்சந் தேகந் திரிபு மறதியெற்
றாக்கஞ் செருக்கும் விடவேண்டும்
ஆம்பல் இடர்கள்வந் தாலுங் கருமத்தை
ஆண்மை யுடன்செய் திடல்வேண்டும் 13

நாளு முயற்சி செயவேண் டும்வேத
நாயகன் பாதந் தொழவேண்டும்
ஆளும்வல் லூழையும் வென்றிடு வார்மடி
யற்றவ ரென்னுந் தமிழ்மறையே 14

இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாதவ ரென்றகுறள்
இடும்பொருள் கண்டிடர்க் கஞ்சா துளுற்றியே
இன்ப நலங்கள் பெறவேண்டும் 15

தூதரைப் போற்சொல் வலிமதி தந்திரந்
தோய்தறு கண்மையுண் மைவேண்டும்
ஓது குறிப்பிற் குறிப்புணர் வோம்பிறர்க்
குற்ற துயரை யொழித்திடுவோம் 16

அமைக்குஞ் சபையிலஞ் சாமையு நீதி
யறையுந் திறனொ டருள்வேண்டும்
தமைக்கண்டு தேறுந் தெளிவொடு தங்குறை
தாமுணர் பெற்றி பெறவேண்டும் 17

ஐம்புலக் கோட்ட மறுத்தறி வுள்ளத்தை
யாளவைப் போமில்ல றஞ்செழிக்கச்
செம்பொருள் தீதின்றித் தேடுவ மேமதத்
தீமையில் லாது திருந்துவமே 18

தேடும் பொருள்வரு வாயிற் செலவு
சிறிது புரியுந் திறல்வேண்டும்,
நாடுங் கிளைஞர் பகைவர்கள் சொல்லினும்
நல்லன நாடிக் கொளல்வேண்டும் 19

பேதமை நீக்குந் தெருள் வேண் டுந்தவப்
பேற்றினர் சேவை செயவேண்டும்
போத மிகுந்த புகழ்வேண் டும்பிறர்
புன்கண் விலக்குந் திடம்வேண்டும் 20

உட்பகை யும்வெளி நட்பு முடைய
வுளுத்த ருறவை விடவேண்டும்
கட்புலம் பெண்ணினக் காட்சிவிட் டால்வெற்றி
கைக்குள் வருமச் செயல்வேண்டும் 21

இழிதொழில் விட்டிரு மைப்பயன் பெற்றிடற்
கேற்ற பலன்செய் மொழிவேண்டும்
மொழியின் படியே செயல்வேண் டுஞ்செயன்
முற்றிலு நீதி முறைவேண்டும் 22

மானம் பெரிதுயி ரற்பமென் றேகொளு
மாட்சிமை யோங்குங் குணம்வேண்டும்
தானங் குடிசெயல் வேண்டுந் தராதலச்
சஞ்சல மியாவும் விடவேண்டும் 23

மூத்தவர் சொல்லே மதித்தும் வழக்கில்
முறையுரைப் பார்குடி யோங்குமிகல்
கூர்த்த வழக்கினி லோரமும் வாரமுங்
கொள்ளுங் கொடியர் குடிகெடுமே 24

தேடுந் தருமஞ் செயத்திட முங்கொடுந்
தீவினைக் கச்சமுஞ் செய்யுநலம்
நாடுத லற்ற கொடையும் பிறர்புரி
நன்றி யறிவும் பெறவேண்டும் 25

காலத்தி லேசெய்த நன்றி யலேகடன்
ஞாலத்தின் மாணப் பெரிதாமே
சீலத்தந் நன்றி மறவா மைமிகச்
சீர்த்தி யுடைத்தெனச் செப்புவரே 26

புத்தியி ஞனம் பிழைதெரி வோமவை
போக்கிப் புனிதம் பொருந்திடுவோம்
நித்தம் பிறர்துயர் தன்றுய ராக
நினைந்தரு ளோங்கி நிலவுவமே 27

உண்மை நிலேநின் றுலகமுய் யும்வழி
யோதும் பெரியவர்ப் போற்றிடுவோம்
வண்மை பெறுந்தமி ழன்னே பெருமையை
மாநில மேத்த வளர்த்திடுவோம் 28

பலநற் செயல்பண்புற் றுறு முலோபம்
படுகுழி யிற்றள்ளும் பாவமெலாம்
நிலவினு மீகை கருணேயுற் றுற்பவம்
நீங்கி நிறைகதி யுய்த்திடுமே 29

ஆசை விளேத்த பவங்களெல் லாமுணர்ந்
தஞ்சி யுருகி லழிந்திடுமே
தேசு மிகும்பல் லறங்கள் செருக்கெனுந்
தீயிடைச் சேரி லெரிந்திடுமே 30

குறைத்து மிகுத்து மூணாதல் பிணிக்கிடங்
கோலெனக் கோடா துணவேண்டும்
நிறைத்த பிணியறக் குற்றமின் றிக்குணம்
நீடமு தாமருந் தேவேண்டும் 31

கல்வி யறிவு குணமேன் மைபல
காரணங் காண்டல் திறங்கருணை
பல்வித மேதைபெற் றாலு மடக்கம்
படைத்தில ரேற்பய னுண்டாமோ 32

திக்கற்று யாசிப் பவர்களி லேதொழில்
செய்தரத் தோர்செயல் செய்யவைத்தே
தக்க வுறுப்புந் திடமுமில் லார்க்கிடந்
தந்துண வீய்ந்திர வோட்டுவமே 33

கற்பவர்க் கில்லை நிதியவ மாகவே
காலங் கழிப்பவர்க் கோங்கிநிறை
பொற்குவை யுண்டெனிற் பொற்புறு நற்கலை
பூப்பதென் றிந்திய பூமியிலே 34

பன்னூ லமுதம் பருகினங் கல்வியெம்
பாங்கே யமைந்ததென் பாருளரேல்
அந்நூ லமைதிப் படியொழு கும்முறை
யாக்கமஃ தல்ல தசட்டறிவே 35

மதம்

எந்த மதத்துங் கடவுளொன் றேதங்கம்
ஏகம் பணிபல போற்பெயரே
தந்த மனத்துக் கிசைந்த மதத்தது
சாற்று நெறிபற்றி வாழுதுமே 36

என்றுமே சைவமொ ழுக்கம்புத் தந்தயை
ஏசு மதமன்ப றாகங்கொல்லா
நன்றுநல் வைணவம் பக்தி முகம்மது
நம்புவை ராக்கிய மேசிறப்பாம் 37

உலகிற் சமயம் பலவே னுஞ்சொ லும்
உண்மையு நீதியு மொன்றாமே
பலநிறம் பல்லுரு வென்றா லும்பசும்
பாலின் திறம்வெண்மை வேறிலையே 38

செம்மை நிறைந்த பெரியோர் களவ்வத்
தேசத் தியற்கை தெரிந்துரைத்த
மெய்ம்மைக ளேமதம் மேலொடு கீழென்ற
வேற்றுமை யேதுநல் வித்தகர்க்கே 39

தம்மத மேலெனச் சாற்றுகின் றார்தெய்வந்
தந்ததென் பார்நும் மதய்பொயென்பார்
தம்மதங் காக்கப் பிறரைக் கொலைசெய்து
தாமும் பிறர்கொல்ல மாளுவரே 40

மக்களுக் காக மதம்வந்த தாமக்கள்
மாமறைக் காகவே வந்தனரா
தக்க விடையளிப் பீர்வெறி மேவித்
தருக்குந் தனிமத வாதிகளே 41

கடவுளே தந்த மறைகாக் கும்மிவர்
காக்க நினைக்கிற் கடவுளுக்குத்
திடமிலை யாமக் கடவுளைச் சேவித்தல்
சீர்மைய தோதெரிந் தோதுமினே 42

ஆறு பலவவை செல்லும் வழிபல
வாயினுஞ் சேரு முததியிலே
கூறு நெறிபல வேனுஞ் சமயங்கள்
கொள்ளும் பரம்பொரு ளொன்றுமே 43

சாதி

ஆடுமா டுங்கூடிற் சூலுமுண் டோகுயில்
ஆந்தை யுடன்கூடி லண்டமுண்டோ
கூடும் பெடையனங் காக்கை யுடனிச்சை
கொள்வதுண் டோகொளிற் குஞ்சுமுண்டோ 44

ஆணும்பெண் ணுமக்கள் கூடிலெச் சாதியே
யாயினுங் கர்ப்பமுண் டாயிடுமே
பூணும் புலமையுள் ளோர்குல பேதம்
புகல்கிலர் புல்லர் புகலுவரே 45

ஆதியிற் பேதமுண் டாக்கிய தானம்மை
அன்னிய ராளு மிழிவடைந்தோம்
சாதி மதஞ்செய் சதிதெரிந் தோமவை
தள்ளிச் சமநிலை சாருவமே 46

சாதியி னேத மொழிவதற் குப்பல
சாற்றிற் பயனென்ன சாகரஞ்சூழ்
மாதலத் தின்றிளை யோர்களை யேகுலம்
மாற்றி மணஞ்செயிற் றீதொழியும் 47

அரசியல் சுதந்திரம்

வேற்றவர்க் கேதொழும் பாகிச் சுதந்திர
வேட்கை மிகுந்து துடிதுடித்தோம்
ஆற்றன் மிகும்பெரி யோர்க ளமைத்த
வவையின் றியாக மளப்பரிதே 48

சத்திய மேவு கரஞ்சந்தர மோகன
தாசனுங் காந்தி மகானுரைத்த
புத்தியன் பார்க்கந்தே சியம் வளர்ச்சி
பொருந்தி யுயரப் புரிந்ததுவே 49

வங்கத்துச் சிங்கஞ்சு பாசு புரிந்த
மறத்திற மோடவன் மள்ளர்களை
பங்கத்தை நீக்கிக்கொண் டாடி மகிழ்ந்திந்தப்
பாரதம் போற்றிய பண்புகண்டே 50

அன்னியச் சேனையி லுள்ளநம் வீர
ரகத்துந் தலப்படை யூடுமிகத்
துன்னிய தேசபக் திப்பெரு வெள்ளத்
தொகுதிகண் டோடின ராங்கிலரே 51

விரோதி வருடந்தைத் திங்கள்பன் மூன்றில்
விளங்கும் புராதன பாரதமே
தராதலம் போற்றக் குடியர சானது
சத்திய மேவெற்றி பெற்றதுவே 52

காந்தி மகானிந்தக் காட்சிகா ணாது
கசட னொருவன்குண் டுக்கிரையாய்ச்
சாந்திபெற் றுரிதை யெண்ணியெண் ணியுளந்
தத்தளித் திட்டதித் தாரணியே 53

பிறவழி அடிமை

அரசி லடிமை யகன்று மினும்பல்
லடிமைத் தனங்க ளகன்றிலவே
அரசிய லார்க ளிவைய றுவே று
மறிந்த வறிகுறி கண்டிலமே 54

தமிழின் நிலை

ஆங்கிலத் திற்குத் தமிழடி மைநிலை
யற்ற திலைகல்விச் சாலைகளில்
பாங்குறு மாசிரி யக்குழு விற்றமிழ்ப்
பண்டித ரையிழி வாக்கினரே 55

செந்தமிழ்த் தாய்க்குச் சிறப்பிலே யேலிந்தத்
தேசஞ் சிறக்க வழியுமில்லை
பைந்தமிழ் மக்களும் பாமர ராயிந்தப்
பண்பணு வேனு மறிந்திலரே 56

தமிழை மொழியவு நாணுவ ராங்கிலஞ்
சாற்றி மகிழ்வர் தமிழகத்தில்
அமருவர் மானமுண் டேலிங்கி லாந்தை
யடைந்தங் குறைவது வேமுறையே 57

உள்ள கலையை யுலைத்திடு வார்தமிழ்
ஓங்க வுழைப்பமென் பார்சிலபேர்
எள்ளள வேனுந் தமிழுக் கிவர்கள்செய்
ஏற்றமுண் டோசொல்லு வீர்கிமிர்ந்தே 58

சுதேச வைத்தியம்

சித்தர் முனிவ ரருளிய வாகடச்
செல்வத்தை விட்டுச் சிறிதளவும்
ஒத்தில தாம்பிற நாட்டு மருத்துவம்
ஓங்க வுதவிசெய் கின்றனரே 59

உணவுக்கும் பல்பொருட் கும்பல கோடி
உறுநிதி யோடின வேபெரிதாய்ப்
பணமருந் துக்கென வேபிற நாட்டிற்
பறக்கநம் மானம் பறக்கின்றதே 60

உலகுக் கெலாங்கலை பற்பல வோதி
யுயர்ந்தவிந் நாட்டி னரசியலார்
அலகில் கலையின் பெருமை யறிந்திலர்
ஆங்கில மோகத்தை தறிவுவைத்தே 61

அடிமைப் படுத்திய வாங்கில வாகட
மாக்கம் பெறப்பல கோடிதந்தார்
இடுமத னிலணு வேனுஞ் சுதேசத்
திலங்குந் தொழிலினுக் கீந்ததில்லை 62

ஈன நிலையிது நூற்றிலெண் பான்மக்கள்
இன்ன லகற்றுமிவ் வாகடத்தை
மான மிலாமற் குறைசொலு மக்களை
மாக்க ளெனச்சொலல் மாண்புடைத்தே 63

இந்த நிலைமை யிருந்திடி விந்திய
ரென்று முயர்நிலை யெய்துகில்லார்
தந்தை பசிக்குத வானன்ன தானந்
தருபவன் போலு நமதரசே 64

கோடி பலமக்கள் பெற்று மிழிநிலை
கொண்ட தமிழன்னை யிந்தியத்தாய்
வாடினர் வாட்ட மறுத்தடி போற்றிடு
மக்க ளிலாது வருந்தினரே 65

மனையை விளக்க வலியில னேழ்நிலை
மாட மியற்ற மனத்துளல்போல்
முனைய கலையுண ராமற் பலவிஞ்சை
மூட்டுவ ராமிந்த நாட்டினிலே 66

கலைபயில் முறை

நங்கலை தன்னை யுயர்த்திப் பிறவற்றில்
நல்லவை கொள்ளுதல் நல்லறிவே
இங்குள வித்தையை விட்டுப் பிறகலைக்
கேற்ற மளிப்ப திழிதகையே 67

செந்தமி ழிற்பண் புளகலை யும்பல
தேசத் திலங்கும் புதுக்கலையும்
நந்த லிலாது பயின்றிடு வோமவை
நல்கும் பயன்கள் நுகர்ந்திடுவோம் 68

எட்டெட்டு நற்கலை கற்று நவீன
வியந்திர மாதியெ லாக்கலையும்
மட்டின்றிக் கற்று நிறைதிரு வாழ்க்கை
மருவும் வகைகொண் டொழுகுவமே 69

மட்டில்லாக் கல்வி யுடற்பயிற் சிபல
வண்கைத் தொழில்க ளெலாம்பயின்றே
எட்டுத் திசையும் வியக்கநம் நாட்டினர்
இன்பத்தில் வாழச் செயவேண்டும் 70

வள்ளுவர் நூலமு துண்ணுவ மேகம்ப
வள்ளல் கவிக்கனி மாந்துவமே
தெள்ளு சிலப்பதி காரஞ்சிந் தாமணித்
தீஞ்சுவைத் தேனைப் பருகுவமே 71

நூதனப்புலவர்

கம்பன் கவியிற் பலதள்ளி யேசில
காட்டுங் கலியுகக் கம்பருண்டே
வெம்பிடு காமக் களஞ்சிய மென்றொரு
விந்தைப் புலவர் விளம்புகின்றார் 72

அக்காவி யத்திற் கெதிரொரு காவிய
மாக்கின ரோரற்பு தப்புலவர்
மிக்காரி யத்திற் கடிமைநூ லென்றிதை
வீசுகென் றுரொரு வித்தகரே 73

தீயி லெரிப்பமென் றார்சில நூதனஞ்
சேரும் பகுத்தறி வாளர்களே
ஆய குணம்விட்டுக் குற்றத்தை யாயு
மவலப்பன் னுடைக் கவிஞருண்டே 74

யாவு மியற்கை யிறைவ னிலையென்
றியம்பிடு வார்சிறி தாதரவாய்
மேவிய சோதிடம் பொய்மையென் பாரிந்த
வித்தகர் புத்தி விளக்கமென்னே 75

வீட்டுக்குட் பாம்பிருந் தாலடிப் பாரந்த
வீட்டை யெவரே யெரித்திடுவார்
நாட்டுங் குறைகளை யாமலந் நூல்களை
நாசப் படுத்துதல் நல்லறிவோ 76

எண்ணிய பல்கலை யாவுந் தெளிந்த
எழிற்பெரி யோர்களை யேந்தியவிப்
புண்ணிய நாடிங் கிவரையுந் தாங்கும்
பொறுமை பெரிய புதுமை யன்றோ 77

மலர் மகளும் கலைமகளும்.

கலைமக ளுந்திரு வுங்கல வார்செல்வங்
கல்வியு மோரிடங் காண்பதின்றாம்
உலகி லெனவுரைத் தாருயர்ந் தோர்களு
முண்மை யிலைநிலை யோதுவமே 78

கலைமகள் மாமி யுறையு நிறைசெல்வர்
கண்ணுறை யாளெனிற் செல்வரெலாம்
புலமற்ற மூடரன் றோதொழில் செய்வரோ
புத்திக்கிவ் வாதம் பொருந்திடுமே 79

பிள்ளையைப் பள்ளிக் கனுப்புவோர் செல்வத்தைப்
பேணா தொழிக்க நினைத்தனரோ
எள்ளள வென்கிலுங் கல்வியில் லார்பிச்சை
யேற்றுப் பிழைப்பதை யென்னென்பதே 80

மட்டற்ற கல்விகற் ருேர்கள்மற் ருேரை
மகிழ்வித்து வாங்கியுண் டார்தொழிலை
விட்டுவிட் டார்மிடி பெற்ரு ரிரத்தல்
மிடிமையை யீதல் வியப்பலவே 81

முன்னமே யிப்புவி யாண்ட முடிமன்னர்
முந்துயர் செல்வர் கலைபயின்றே
கன்ன லமுதக் கவியுரைத் தார்மலர்க்
கன்னியர் கூடி யிருந்திலரோ 82

ஆரியமும் தமிழும்

ஆரியந் தெய்வ மொழியதி னின்றிவ்
வருமைத் தமிழும் பிறந்ததென்பார்
தேரிய வாண்டுமூ வாயிர மாரியர்
தேசத்தில் வந்ததென் ருேராரோ 83

நல்வித மாகப்பல் லாயிர மாண்டின்முன்
நாகரி கஞ்சிறந் தோங்குதமிழ்
சொல்லுமூ வாயிர மாண்டி லிவண்வந்து
தோன்று மொழியிடைத் தோன்றிடுமோ 84

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யாதி
யிலங்கு மியல்பி னினிமைகண்டோர்
வழுத்துவர் தெய்வ மொழியமு தாந்தமிழ்
மாமொழி யேயென மாண்புடனே 85

மெய்யுயி ராயுத மோடுயிர் மெய்கள்
விதியி னமைப்பொடு மாரியத்தின்
செய்ய வெழுத்தி னமைதி முறையையுந்
தேறினு ராரிய மேலென்பரோ 86

ஓமே பிரணவ மோரைந் தெழுத்து
முடலெனக் கூறு மிருமொழியும்
ஆமே யிவையடுக் கிற்சட மாந்தமிழ்
ஆரியத் தேதிவ் வமைதிகளே 87

ஓமத்தி பாமுக னென்பர் செழுந்தமிழ்
ஓமந்த யானை யுருவமதே
ஆமத் தகுதியவ் வாரிய ஓவுக்
கமைவதுண் டோசொலு மாய்ந்துணர்ந்தே 88

நால்வரும் பல்பெரி யோருமாழ் வாரும்
நவின்ற வமுதக் கவியிருக்கப்
பால்வரு மாலயத் தாரிய மோதல்
பழிப்பல வோதமிழ் மக்களுக்கே 89

வேதம் பினேசெலத் தெய்வமுஞ் செந்தமிழ்
வேட்டதன் பின்செலும் மேன்மைகண்டோம்
நீதந் தனிலிறை யோடுட னுண்டியும்
நேரெனச் செப்புந் தமிழ்நெறியே 90

காதலி னுடு மனைதந்தை யாலுங்
கலப்பது நந்தமிழ் மாமணமே
போத மிலாத நெறியினுங் காமம்
பொருந்தல் மணமெனு மாரியமே 91

தாழ்ந்தவர்க் கும்முயர்ந் தோர்க்கும்வெவ்
வேறெனச்
சாற்றிடு நீதிக ளாரியத்தில்
வாழ்ந்தபொற் கையன்ம னுமன்ன னர்செயல்
மாண்புறு செந்தமிழ் மாநெறியே 92

தன்னல வேள்வி தகையிலின் பந்துதி
சாலுமவ் வாரிய வேதத்திலே
நன்னய மார்தமிழ் வேதமவ் வள்ளுவ
நாயகன் நூலிதிற் குற்றமுண்டோ 93

அகத்திய னரிய ரிங்கணே தற்குப்பல்
லாயிர மாண்டின்மு னேயியலே
வகுத்தன னேயதற் கெண்ணற்ற வாண்டின்முன்
வாழ்ந்து வளர்ந்தது வண்டமிழே 94

ஓங்குந் தமிழிலெண் ணற்றநன் னூல்க
ளுயர்ந்த கபாட புரத்தொடுநீர்
வீங்குங் கடலுண்ணப் பட்டதை யெண்ணி
விதிர்க்கு முளமிக வெய்துயிர்த்தே 95

முந்துள நூல்களெ லாமிழந் தும்பினு
மொய்த்திடும் பற்பல நூல்களுடன்
செந்தமிழ்த் தாயுயர் சந்த மிகுந்திளஞ்
சேயிழை யாகத் திகழுகின்றாள் 96

சீரிய பற்பல சாத்திர மியாவுஞ்
செறிந்தும் வழக்கி லிறந்தவட
வாரியந் தன்னையும் போற்றிடு வோந்தமிழ்
அன்னைக்குப் பின்னென் றறிந்துகொண்டே 97

ஐந்திற் பொருளி னிலக்கண மில்லையவ்
வாரியத் தேயென் றறிந்துளநாம்
பைந்தமிழ்த் தாயைப் பணிகுவ மேகடற்
பார்புக ழத்துதி பாடுவமே 98

பழைமை

பண்டு விமான முதற்பல பொய்யென்பர்
பண்புறு யோகம் மருந்தினைய
விண்ட நிலைக்கின்றவ் வெள்ளையர் வந்திலர்
மெய்ம்மை பகுத்துணர்ந் தோதுமினே 99

வெள்ளையர் நற்செயல் விட்டவர் வேடமும்
வீண்செய லுங்கைக் கொடுபழைமை
தள்ளுகென் பார்விலங் கொத்தவ ரேபெயர்
தண்டமிழ் மக்களென் றோதுவரே 100

எரிபொருள் யாவையுங் கண்டவை மக்கட்
கிதஞ்செயச் செய்தவர்க் கீண்டவைகள்
பரிவுறு பல்படை யாகித் துயர்செயப்
பண்ண லரிதெனப் பன்னுவரோ 101

இன்றுள போல மிகுந்தில யேனு
மியந்திர மாதியொ ரோர்விதமாய்
அன்றுஞ் சிறிதுண் டிலாத பொருளுக்
கமைவதின் றேபெய ராய்ந்திடிலே 102

வானம் புவிமிசை யுள்ள பொருட்கள்
வகையுந் தகையும் வகுத்துரைத்த
ஞானந் திகழ்பெரி யோர்கள் பெருமை
நவிலுந் திறமை நமக்குளதோ 103

பெண்

பூவிடை நாண்முத னன்கும் பொருந்திப்
புருடரன் பைப்பெறும் புத்தியுடன்
நாவி னலங்கொடு நன்னெறிப் பூணணி
நாரிய ரேகற்பின் நாயகமே 104

பத்தாவின் சொற்கொண் டவன்குறிப் பின்வழி
பற்றி யொழுகுநற் பண்புடனே
சித்திரம் போலெழில் சேய்பெறல் செம்மொழி
சேர்பவள் கற்புடைச் சேயிழையே 105

கொண்டா னெழுமுன் னெழுந்திருந் தேதுயில்
கொண்டபின் றூனுந் துயில்கொளுவாள்
உண்டபி னுண்டயல் வீடுசெல் லாளிவள்
ஓங்கிய கற்புடை யொண்டொடியே 106

தந்தை கடனுயர்ந் தோனெனச் செய்தல்
தனயன் கடனென்ன நோற்றனரோ
இந்த மகப்பெற வென்றுல கேத்து
மியலுஞ் செயலு மியைந்திடலே 107

தனியுடைமை பொது உடைமை

சமத்துவங் கொண்ட பொதுவுடை மைபரன்
தான்பொயென் றோதிடும் நாத்திகமே
உமத்த தனியுடை மைச்சுய நன்மையர்
ஓதுவர் தெய்வங்கொ ளாத்திகமே 108

ஈங்கிறை சித்தப் படிசம தர்மத்தை
யேற்றோ ரிறைவ னிலைமறுமை
ஊங்கிலை யென்பர் நினைக்க நகைமிக
வோங்குமிப் பித்த மொழிவதென்றோ 109

மறுமையுந் தெய்வமு முண்டென் பவர்பிறர்
வாழத்தம் மொத்து மகிழ்ந்துசெய்தே
அறநெறிச் சேர லிவர்க்கிவண் சாந்தியு
மம்மையில் முத்தியு மீதமிதே 110

ஆண்டவன் றந்தைநாம் பெற்றமக் கள்புவி
யாவு நமக்குப் பொதுவளித்தான்
ஈண்டவன் கட்டளை விட்டவ னைப்புகழ்ந்
தேய்ப்பர் தனியுடை மைத்திறலோர் 111

தந்தை பொருளவன் மைந்தர்க் கெலாம்பொது
தாரணி தாரணி யோர்பொதுவே
சிந்தை யலபரன் யார்க்குந்தந் தைநிரு
மித்த பொருளெவர்க் கும்பொதுவே 112

சத்தியங் கல்வி தொழில்பொருள் வீரஞ்
சமத்துவ மாதி தழைத்தெழுந்தால்
நித்தம் நிறையின்ப வாழ்விது வேயன்பு
நீடி நிலைக்குஞ் சுதந்திரமே 113

செல்வச் செருக்கு

செல்வமே சிந்தை நிறைவா மேயது
சேர்பய னீத லனுபவித்தல்
நல்லவை துய்த்துத வார்கள்வைப் போருறு
நாயனை யாரிந்த நானிலத்தே 114

எவ்வெப் பிணியிலுஞ் செல்வப் பிணிமிக
எற்றமென் பார்களெவ் வாறெனிலோ
அவ்வப் பிணிக்கு மருந்துள விப்பிணிக்
கான மருந்தொன் றறிந்திலமே 115

கண்ணை மறைத்திடும் வாய்மூ டும்மிரு
காதை யடைக்குந் திமிரேறும்
எண்ணொடு நீதி யிரக்க முதற்பல
வில்லாம லோட்டிடு மிப்பிணியே 116

கற்றவ ரைப்பெரி யோரைத் தவநிறை
கண்ணிய ரைக்கரு தாதிகழ்வார்
உற்ற மடமைக் கயவர்க ளுந்திரு
உற்றவ ரேலிவர்க் குற்றவரே 117

மிடிமை மருந்திப் பிணிதீர்க் குந்திரு
மேவின பேரில் மிகச்சிலரிக்
கொடுமைப் பிணியின்றி வாழுகின் றார்செல்வங்
கொண்ட பயனிவர் கொண்டவரே 118

மிடியின் கொடுமை

பான மழிக்கு மெழில்சிதைக் கும்முடல்
வற்றப் புரியு மதிகெடுக்கும்
ஈனச் செயலி லிறங்சவைக் கும்பிறர்
எள்ளி நகைக்க மிடிசெயுமே 119

இல்லவள் மக்க ளிளங்கிளை நட்பினர்
யாரும் வெறுக்கப் புரிந்திடுமே
நல்ல வரையும்பொல் லாரென வேயிந்த
நானிலந் தூற்றச் செயுமிடியே 120

ஞானமொன் றேயன்றி மற்றவை யாவையும்
நாசப் படுத்திடும் நல்குரவே
ஊன மிகும்பிண மாக்குந் தரித்திர
முற்றவர்க் கிங்கெது மில்லையந்தோ 121

கல்விச் செருக்கு

யாவுங்கற் றோர்களு மில்லையொன் றுந்தெரி
யாத வருமிலை யிவ்வுலகில்
மேவுங் கலைசிறி தோர்ந்து செருக்கு
மிகுந்திடு வோர்கள் மிகப்பலரே 122

ஓதி யுணர்ந்தடக் கம்பெற்றுக் கற்ற
வுறுநெறி நிற்ற லுயர்வுடைத்தே
ஊதிய மீறின மென்று மிகுசெருக்
கொன்றினர்க் கென்று மிழிவுடைத்தே 123

பதவிச் செருக்கு

உத்தியோ கத்தி லிருப்பவர் தம்மி
லுயர்ந்தவர்க் கஞ்சி யொடுங்கிடுவார்
மெத்த நிமிர்ந்ததி காரந்தங் கீழவர்
மேலே செலுத்தும் விதம்பெரிதே 124

விண்ணின் றிறங்கினர் போனடை சொல்செயல்
மேவித் துடுக்கு மிகவிளைப்பார்
நண்ணும் பொதுமக்க ளூழிய ராமிவர்
நாயக ரென்ன நடிப்பரந்தோ 125

பதவிப் பிணியும் பணப்பிணி யுங்கொண்டு
பாதகஞ் செய்யும் படிறர்களே
உதறி யொறுத்து முகத்தி லுமிழ்ந்துநல்
லுத்தம ரோங்க வுதவுகவே 126

தன்னல மற்றறி வன்புரஞ் சேருமவித்
தாரர் பதவிபெற் றோங்கிடவே
தன்னலம் பேணுஞ் சதியின ரைப்புறந்
தள்ளியே தண்டித் திடல்வேண்டும் 127

பாரத நாட்டின் பழங்காலநிலை

செல்வ மறிவொழுக் கம்மனச் சாந்தியுஞ்
சேர்ந்து விளங்கிய செந்தமிழர்
நல்வகை யாகவிப் பாரத நாட்டினில்
நண்ணி மகிழ்ந்து வதிந்தனரே 128

ஆரியர் வந்து வடக்கிருந் தார்கள்தெற்
கண்டித் தமிழ ரமர்ந்திருந்தார்
ஈரிய லாகிய நாகரி கங்க
ளியைந்து வளர்ந்தன வீண்டினிதே 129

சொந்தக் கலையினு மன்னிய மேலெனத்
தோத்திரஞ் செய்யுந் தமிழர்களின்
விந்தையு மாரியர் தற்கலை வேட்கையும்
வீறு தமிழ்க்கிழி வாக்கினவே 130

பற்பல வான பகுதியிற் யற்பல
பார்த்திப ராண்டு பொருமையினல்
நற்குணம் விட்டுத் துரோகமுஞ் சண்டையும்
நாடினர் நாசமு நண்ணியதே 131

இந்நிலை கண்டிசி லாமிய மன்ன
ரிருஞ்சமர் செய்திட ரெய்துவித்தார்
மன்னு மிருமதப் போர்க்கள மாயது
வந்தன ராங்கில வர்த்தகரே 132

வந்தவர் மன்னவ ராய்வணி கந்தொழில்
வண்கலை யாவு மடக்கினரே
சொந்த நலன்கள் பெருக்கி நமைமிடி
சூழ வடிமையு மாக்கினரே 133

அன்னவ ரின்னடிக் கீழிரு வோரு
மடங்கிக் கிடந்தன ராண்மைவிட்டே
நன்னய மார்பெரி யோரிதை யோர்ந்தொரு
நல்லவை கூட்டினர் நாட்டினிலே 134

வீர நிறைந்து சுதந்திர தாக
மிகுந்து தியாகம் புரிந்தனரே
ஓர நிறைந்தவவ் வெள்ளையர் வேற்றுமை
ஓதிப் பகைமையை யுய்த்தனரே 135

இந்துக்க ளிவ்வலை வீழ்ந்திலர் தப்பினர்
ஏற்றன ரேயிசி லாமியரே
சொந்த மதமென்றுஞ் சாதியென் றும்பல
தூற்றினர் வேற்றுமை தோன்றியதே 136

குறுமைக் குணங்கள் மிகுந்துநின் றோரிந்துக்
கூட்டம் பகையெனக் கொண்டுரைத்தார்
சிறுமைக் கலக மிகவிளைத் தாரிந்தத்
தேசத்தை யேபிளந் தீயுமென்றோர் 137

அடிமிசை யஞ்சலித் தேனிரு வேமுமொன்
றுயர சோட்சி வதிவமென
அடிகணங் காந்தி யறைய வவர்மறுத்
தாக்கினர் வெம்பகை யன்பறவே 138

வெள்ளையர் நிற்கவிந் துக்கண்மே னேரடி
வேட்டை நிகழ்த்தினர் வங்கத்திலே
கொள்ளை கொலைகள் புரிந்தனர் கண்டுடன்
கோசல மக்கள் கொதித்தனரே 139

மகமதி யமக்கள் தம்மைப்பீ காரிந்து
மக்களுங் கொன்று குவித்தனரே
மிகவிந்தத் தீமை விலக்கிட நாட்டினை
வெட்டினர் சாந்தி விழைவினிலே 140

வெட்டியுஞ் சிந்துபாஞ் சால முதலவெவ்
வேறிடந் தோறும் பகைவிளைந்தே
நட்டங் கொலைகொள்ளை பெண்கள வாதி
நடந்தங் கமைதியு நண்ணியதே 141

சிந்திற் கொடுந்தொழில் சேர்வது கண்டுடன்
சீறுமிந் துக்களைச் சாந்திசெய
நந்த லிலாதநங் காந்தியு நோன்பினை
நண்ணி யமைதியை நாட்டினரே 142

சாந்தி நிலவுதல் கண்டு கொடுஞ்சினந்
தாங்கி யொருவன் தருக்குடனே
காந்தியைக் கொன்றன னேயுல கெங்குங்
கலக்க மிகுக்கக் கடிதினிலே 143

வெள்ளையர்க் கேயடி மைப்பணி மேவிய
வேந்தர்கள் நாடு பிரிந்ததற்பின்
கொள்ளுந் தனியர சாயின மென்றனர்
கொக்கரித் திட்டனர் கோட்டமுற்றே 144

அன்னவ ராட்சியின் கீழுள மக்க
ளனைவரும் வெம்பி யடர்ந் தெழவே
நன்னய மார்பொறுப் பாட்சிதந் திந்திய
நல்லர சோடொன்றி நண்ணினரே 145

வேந்தர்கள் கூட்டமும் வீழ்ந்தன வேகாசு
மீரத்தைப் பாகித்தா னம்விரும்பி
ஏந்துதன் சொல்லுடன் கொள்கையு நீதியு
மின்றிச் சமரி லிறங்கியதே 146

மக்களு மன்னனும் வேண்டிட வேகொடு
மாபத கத்தை விலக்கவுரம்
மிக்கநம் பாரதச் சேனை புகுந்து
விதிமுறை யோடமர் செய்கின்றதே 147

பாதுகாப் புச்சபை நீதி நெறிகள்
பறந்திட வோரம் பகர்கின்றதே
ஓதுபா கித்தானத் திற்சிறு பான்மையர்
ஓடக் கொலைகொள்ளை யோங்கியதே 148

சண்டைக்கென் றுயத்தஞ் செய்கின்ற தேபாகித்
தானமும் பாரதஞ் சாந்திமிக
மண்ட விழைகின்ற தேமுடி வென்னென
மக்களு முள்ள மறுகினரே 149

பாரதக் குடியரசின் பாரம்

யுத்தத்தி னுல்வந்த பஞ்சத்தை யோட்ட
வுழைப்ப துடனதி தித்திரளை
மெத்தப் புரப்ப துடன்றனைக் காப்பதும்
மேன்மைக் குழைப்பது மேலினியே 150

சீறி யெழும்பல கட்சிப் பிணக்கினர்
செய்யுஞ் சிரமத்தைத் தாங்குவதும்
மாறு படும்வல் லரசினர் வீசும்
வலையைக் கடப்பது மாபெரிதே 151

நாட்டி லமைதி யுடன்சிறு பான்மையர்
நன்குறச் செய்வதும் நஞ்சனைய
கூட்டத்தி னோர்செயுங் கோளைக் கடப்பதுங்
கோட்டங்கொள் பாகித்தா னஞ்சினந்தே 152

காட்டும் பகையைக் கடப்பதும் வெள்ளையர்
கக்குங் கபடத்தி னீங்குவதும்
ஈட்டும் பொருளி னிலையை யுயர்த்தலும்
இன்னுமே பற்பல வின்னல்களும் 153

இந்திய வாட்சிக் கிருஞ்சுமை யாமிவை
யாவையு மூக்கத் துடன்விலக்கி
நந்த மரசை யுயர்த்துவ மேகனு
நன்குயர் நீதியு நம்மிடமே 154

ஐரோப்பியர்

புதுமைப் பெருமை பொருந்துமை ரோப்பியர்
பூதல நாடுக ளத்தனையும்
பொதுமை யிலாதடி மைப்படுத் தித்திரள்
பொற்குவை கொண்டு பொலிந்தனரே 155

ஒன்பா னுடன்பத்து நூற்றுப்பன் னன்கினி
லுற்ற பொருமை மிகுந்து சமர்
வன்பால் விளேத்து மடிந்தடி மைப்படு
மக்களே யுங்கொன்று மாய்த்தனரே 156

ஈங்கிவ ராதிக்கப் போட்டியி னற்கொடு
மின்னல்க ளெய்திய திவ்வுலகம்
ஓங்குபத் தொன்பது நூற்றுமுப் பானெடு
மொன்பதில் மீண்டு முடற்றினரே 157

வெற்றிபெற் ருேரொன்று கூடினர் சாந்தி
விளேத்திட வைக்கிய தேசவவை
உற்றிடு பாதுகாப் புச்சபை யுஞ்செய்து
முண்மை யிலாம லுழன்றனரே 158

நாழி கவிழ்த்திவிற் போனளந் தான்கண்டு
நன்கு நிமிர்த்தென வாங்குபவன்
ஊழிற் படுக்கவைத் தேயளப் பாயென
வோதின னைமநி யாயமன்னன் 159

தம்முன் வரும்வழக் கத்தனைக் கும்மிவர்
சாற்றிடு நீதியித் தன்மையதே
நம்புந னீதி நவில்வது பாரத
நாடன்றி வேறென்று மாங்கிலேயே 160

கூட்ட மிரண்டென வேபிரிந் தார்சபை
கூறுசொற் போர்க்கள மானதிவர்
தேட்ட மெலாங்கொலை பாதக வாயுதஞ்
செய்யச் செலவுசெய் கின்றனரே 161

உண்டியென் றேங்கிய மக்களுக் கேயணுக்
குண்டுமக் கேயெனக் கொண்டுநின்றார்
மண்டிய நற்சம தானங் கொடுஞ்சல
வாயுக்குண் டாயுமென் றேதுகின்றார் 162

மன்னுயிர்க் கென்றுத னின்னுயிர் தந்துயர்
மாண்பமை யேசு மதத்தினரே
தன்னலத் திற்கிவ் வுலகினைக் கொன்றுடன்
சாந்தி தரத்துணிந் திட்டனரே 163

முன்னிவர் மோதல்தன் நாட்டினி லேயின்று
மோதுவ தாகிய நாடுகளில்
மன்னும் வறுமை யுடனிக் கொடுமையும்
வந்திடி லென்செய்வர் மக்களந்தோ 164

மக்களைக் கொல்லும் வகைபடித் தார்மக்கள்
வாழ்க்கையைத் தீய்க்கும் வழிதெரிந்தார்
தக்கவிஞ் ஞானப் பயனடைந் தார்நலஞ்
சாலு முறையினைத் தள்ளினரே 165

குறைக ளுருசியர் மீதுரைப் பாரந்தக்
குற்றங் கிணறெனிற் கூறுமிவர்
மிறைகளே வாருதி நேரென லாமிந்த
மேதைகள் செய்கை மிகவியப்பே 166

நிறவெறி யாதிக்க நீள்வெறி வஞ்சனை
நீக்கிலர் மக்களைக் காப்பமென
மறவெறி கொண்டனர் தஞ்செயல் யாவுமிவ்
வையமெ ணுதென வெண்ணினரோ 167

இலங்கையைப் பர்மிய நாட்டைமுன் வெட்டின
ரிந்திய நாட்டி னிருமருங்கை
விலங்கப் பிரித்தனர் நம்விவ காரத்தின்
மீதிவர் நோக்கமு மோர்ந்துளமே 168

பின்வருங் காரிய முன்னுணர்ந் துற்ற
பெருந்தகை மேவிய வாங்கிலர்கள்
மன்னு சுதந்திர மீந்தன ரேயிவர்
மாண்பினை யோர்ந்திலர் மற்றவரே 169

போர்த்துக்க லோடு பிரஞ்சினர் முன்பிவண்
புக்கிருந் தார்குடக் குங்குணக்கும்
நீர்த்தன் றித் தேர்தல்வைப் போமெனச் செப்புதல்
நீதிய தோவந்த வாறிதுவே 170

எம்முடை நாட்டொரு பாகமென்றூர்மதி
யீன மடமைக் கிரங்குகின்றேம்
செம்மைகொ ளாங்கிலர் செய்கைகண் டும்பினுந்
தீய நெறிதனிற் செல்லுகின்றூர் 171

திராவிடம்

கன்னடங் கேரள மாந்திரஞ் செந்தமிழ்
காணு நிலங்கள் திராவிடமாம்
மன்னு மிதைப்பிரித் தேதனி யாட்சி
வகுப்பமென் றேர்சில ரோதினரே 172

வேற்றுமை கொண்டிந்த நாட்டைப் பிரித்து
விளைத்த கொடுமைக் களவிலையே
ஆற்றிய தீமை யறிந்தில ராகி
யவல மினும்புரி கின்றனரே 173

நாடு பிரிந்தன் றும் மின் று மடைகொடு
நாச முணர்ந்து மினும்பிரிவே
தேடுகின் ருர்முன மன்னியர்க் கேயன்பு
செய்துநின் றுரிவர் செய்கையென்னே 174

பிரிவினைக் கேட்டைக்கண் முன்னிவர் கண்டும்
பிரிவினை தேடல் பெருந்தகையோ
பரியுமிக் கொள்கை யிதர திராவிடர்
பாங்கிலை யீங்கிவர் பன்னுவதேன் 175

திரவிட நாட்டைப் பிரிக்கமுன் நின்று
செயந்தரு வீரென வேயிதர
திரவிடர் கேட்டன ராவவர் சார்பிலுந்
செப்புதற் காரிவர் தேர்ந்திடிலே 176

பார்ப்பன ரல்லவர் கட்சியு நீதி
பகர்கட்சி யுமுனம் போயினவே
ஆர்ப்பார் சுயமரி யாதைக்கட் சியின
மண்டு நலவுரி மைச்சபையே 177

இன்னவை போய்த்தமிழ் நாடு தமிழருக்
கென்னுமோர் கட்சி யெழுந்ததுவே
அன்னது போய்ப்பின் றிராவிடக் கட்சி
யவதரித் திங்க ணுலாவியதே 178

ஈரோட் டிளைஞர் மணத்தின்பி னேயிதற்
கீண்டுமுன் னேற்றவா லெய்தியதே
நீரோட்ட மென்ன வெழும்வற ளும்பெயர்
நீளும் மறையும்வே ருய்வருமே 179

ஆபாச மாம்பிர சண்டப்ர சங்கமு
மார்ப்பும் பிறவவ தூறுகளும்
மாபாரி லாரிய ரையர சைக்கொடு
வன்மொழி கூறலு மேதொழிலே 180

நிலையற்ற கொள்கையு நீரற்ற சொற்களும்
நேர்மை யிலாத செயல்களுமே
தலைபெற் றிருந்தன வாலிப மாந்தரைச்
சால்பற்றி டும்வழி தள்ளினரே 181

வங்கத்தி லேநவ காளிப் படுகொலை
வாழ்த்துதீர் மானம் வகுத்திவர்கள்
சங்கத்தி லேநிறை வேற்றின ரேபுவி
தன்னிலிவ் வாறெவர் சாற்றுவரே 182

இந்திய நாட்டின் சுதந்திர நாளுல
கெங்கும் புகழக்கொண் டாடினமே
பந்த முறுந்துக்க நாளென வேயிந்தப்
பண்புடை யார்கள் பகர்ந்தனரே 183

ஆதியிற் பார்ப்பன ரல்லவர் கட்சி
யறிஞர் சுயநல மற்றவராய்
நீதி நலம்புரிந் தார்வசை யற்றது
நின்றில தேயென் றிரங்குவமே 184

தனிக்கப் பயந்துல கியாவுக்கு மோரர
சாங்கநன் றேயெனுங் காலத்திலே
இனிக்கப் பிரித்திந்த நாட்டினுக் கேசிறப்
பெய்துவிப் மோமென் றியம்புகின்றார் 185

செந்தமிழ் நாட்டின் வடக்குப் பகுதியெந்
தேசமென் றுந்திரர் செப்புகின்றார்
முந்திய தெற்குந்தென் மேற்கு மெமதென
முன்னி மொழிந்தனர் கேரளரே 186

மேலம் பகுதியைக் கன்னடர் வேட்டனர்
விட்டு விடிற்றமிழ் நாடுமுண்டோ
ஏலத் திரவிடங் கேட்கு மொருசில
ரீங்கிவர்க் கென்ன வியம்புவரே 187

செய்ய திராவிட நாட்டை விடுதலை
செய்யும் பணிபுரி யாதிருந்தார்
உய்யப் பிரித்திங் குதவுகென் றோது
முரிமையுண் டோவிவர்க் கோர்ந்திடிலே 188

அடிமைத் தளையை யறுக்கத்தே சீய
வவையுந் தியாகம் புரிந்துமிகுங்
கொடுமைக்கு ளான பொழுதிந்தக் கூட்டமுங்
கூடித் தியாகம் புரிந்ததுண்டோ 189

வெள்ளையர்க் கேதுணை யாகிச் சுதந்திர
வீரருக் கின்னல் விளைத்துநின்றார்
கொள்ளுஞ் சுதந்திரம் பெற்ற பினுமிவர்
கோட்ட மணுவுங் குறைந்திலதே 190

மேன்மை மிகுந்ததே சீய வவையிவர்
மீது வெறுப்புற லேமுறையப்
பான்மை யவர்க்கிலை யீங்கிவ ரேபகை
பற்றிப் பழிமொழி யோதினரே 191

பாரனைத் துமிந்தப் பாரத நாட்டுப்
பழமைச் சிறப்பைப் பகர்கிறதே
சீரனைத் தும்விட்டுக் குற்றத்தை யேகண்டு
செப்புகின் றாரிது சீருடைத்தோ 192

சாதி யிலையெனச் சாற்றுகின் றாரிரு
சாதி யுளவென்றுஞ் சாதிக்கிறார்
மோது பழிமொழி யோதுகின் றாரிகல்
மூட்டுகின் றார்வெறி யூட்டுகின்றார் 193

ஆரியர் தேகத் திரத்தந் திராவிடர்
யாக்கை யிரத்தமு மேகலந்தே
ஓரிய லாயின வேயினம் வேற்றுமை
ஓதல் பெயரள வாகுமன்றே 194

புத்திக்கொவ் வாத புராணங்கள் யாவும்
புதைகின்ற போது பொருள்விளக்கல்
மெத்த வழிவின்றிக் காப்பதற் கோமக்கள்
மேன்மைக் குணங்கள் கெடுவதற்கோ 195

எந்த மதத்துங் குறையுள வேநம
திந்திய நாட்டின் மதக்குறைகள்
நந்த வெடுத்துரைக் கின்றன ரேயுள்ள
நல்லவை யாது நவின்றிலரே 196

குற்ற மிலாத மதமு மிலையுயர்
கொள்கை யிலாத மதமுமிலை
குற்றத்தி னேடுயர் கொள்கையை யுங்குறை
கூறிடு வார்க்கென்ன கூறுவதே 197

கற்பகச் சோலையிற் காகமு நிம்பக்
கனிகளைத் தேடிடுங் காட்சியெனப்
பொற்புள நூல்களி னூடுங் குறைகளைப்
புந்தியி லாய்ந்து பொறுக்குவரே 198

சீர்திருத் தங்களுண் டானதுங் கோவிற்
றிறப்புமெம் மாலெனச் செப்புகின்றார்
ஆர்தரு மின்னவை பாரத மெங்கணு
மாயின வேயெவர் காரணமே 199

ஆரியர் (பிராமணர்)

அன்பொ டறமுடை யாரந் தணருயர்
வான பிரமத்தி லைக்கியமாய்
நின்றவ ரென்றும் பிராமண ராம்பிற
நீரந் தணரெனல் நேர்மையதோ 200

சூடு கொழுத்திப் பொரியுணல் போன்றுநுஞ்
சொந்த நலனை விழைந்திலகு
நாடு குலைந்திடப் பேதம் விதைத்திடர்
நண்ணப் புரிந்தது நன்றலவே 201

சாதி வகுத்ததற் காதர வாய்ப்பல
சாத்திரஞ் செய்து சமயமுடன்
நீதியிற் பேத மியற்றியித் தேச
நிலையைக் குலைத்தவர் நீவிரன்றோ 202

தத்துவம் யோகமும் ஞானமுந் தெய்வமுஞ்
சாற்றிய யாவையும் பொய்ம்மையென்ன
மெத்தப் பிறர்நகை செய்யப் புராணமும்
வேறுபன் னூலும் விளம்பிவிட்டீர் 203

சாத்திரக் குப்பையைத் தள்ளித் தகையறு
சங்கை மிகுந்த சடங்ககற்றிக்
கோத்திரந் தன்னி லுயர்வுடை யோமெனுங்
கொள்கையைக் குப்புற வீழ்த்திடுவீர் 204

அகந்தை சுயநலந் தந்திர நீக்கி
யனைவருஞ் சோதர ரென்றெண்ணுவீர்
மிகுந்த பிராயச்சித் தம்முனஞ் செய்த
மிறைக்குப் புரிந்து விளங்கிடுவீர் 205

ஆசாரங் கல்வி யறிவுதெய் வங்கொள
லாதிநற் பல்குண மார்ந்திருந்தீர்
மாசா மகந்தை விகற்பம்விட் டன்புடன்
வாழி னுமக்கிணை யாருளரே 206

சைவர்கள் பார்ப்பன ரல்லவ ரேயுங்கள்
சாதிக் கொடுமைக் களவில்லையே
மெய்வரு நீதி யுணர்ந்திம் மடமையை
விட்டிடு வீர்மதி பெற்றிடுவீர் 207

முகம்மதியர்

மன்னு முகமது மாநபி யாருரை
மாமறை பற்றிய மாந்தர்களே
துன்னும் விருப்பும் வெறுப்பு மிலாமலே
சொல்லு முரையுளத் தாயுமினே 208

எம்மதத் தோருஞ் சகோதரர் போலவிவ்
விந்திய நாட்டி லினிதிருந்தார்
உம்மதத் தோர்களென் னேமத வேற்றுமை
யோதிப் பகைமை வளர்ப்பதுவே 209

இந்துக்க ளாலெம் மதத்துக் கிடர்வரு
மென்றுரைத் தீரெம் மதத்தினுக்கும்
இந்துக்கள் தீமை யிழைத்ததுண் டேலது
மென்றென் றியம்பிடு வீரெடுத்தே 210

உங்கள் மதத்தவ ராலிந்து மக்களுக்
குற்ற கொடுமைக் களவிலேயே
பங்கஞ்செய் திந்துக்கள் மேற்கொடும் பாரப்
பழியையும் போடுதல் பண்பலவே 211

மகளைத் தருதி மனைவிலைய யீதி
மறுத்திடிற் சண்டைக்கு வாவெனவே
இகல்புரிந் தெண்ணற்ற மக்களைக் கொன்று
மிடக்கிழைத் தோரும் மினத்தவரே 212

படைகொடு வந்து படுகொலை செய்ததும்
பாவைய ரைச்சிறை பற்றியதும்
தடநெடுங் கோவி லிடித்ததும் யாரெனச்
சாற்றிடு வீர்முன் சரிதத்திலே 213

இந்துக்க ளிந்து மகாசபை தன்னை
யிகந்துதே சீய சபைக்குதவி
தந்தன ரேமுசி லீஞ்சபை யைமிகச்
சார்ந்தன ரேயிசி லாமியரே 214

அன்னியு ராளுகை நீக்கு மரும்பணி
யாற்றுதே சீய வவையினையே
சொன்னதிந் துவகுப் புச்சபை யென்னவே
சூழிசி லாமியர் பேரவையே 215

தேசத்தை வெட்டித் தருதிர் மறுக்கிலுந்
தேகத்தை வெட்டுவ மென்றுகொடு
நாசக் கலகம் விளைத்ததி னலிந்த
நாட்டைப் பிரித்தன்று நல்கினரே 216

எண்ணற்ற மக்க ளிடம்பெயர்ந் தாரினு
மெண்ணற்ற மக்க ளுயிரிழந்தார்
எண்ணற்ற மாதர்கள் கற்பிழந் தாரினு
மெண்ணற்ற தீமைக ளெய்தினவே 217

மக்க ளுளத்திற் பகைவளர்த் தேகொடு
வன்சமர் செய்யத் துணிந்தனரே
மிக்கநம் பாகித்தா னத்தவ ரேவெறி
மேவிக் கலகம் விளைத்தவரே 218

செய்தவர் செய்த பயன்பெறு வாரெனுஞ்
செந்தமிழ்ச் சொல்லின் படிமுடியும்.
தெய்வமு நீதி யுளாரிட மேயெனுஞ்
செம்மை மொழியுந் தெளிந்தனமே 219

இந்திய முகம்மதியர்

இந்திய ராமிசி லாமிய ரேமுன
மிங்கண் முகம்மதி யச்சபையே
நந்த விலாத நலந்தரு மென்றுளம்
நம்பிப் பிரிவினைக் காசிதந்தீர் 220

இந்துக்க ளுங்களைப் போலிந்து மாசபைக்
கேற்ற மளித்ததை யாதரித்தால்
உங்கள் கதியென்ன வென்றுணர்ந் தாற்சிறி
துண்மை யுமக்குப் புலப்படுமே 221

உற்றதே சீய வவையையிந் துக்களின்
ஓரச் சபையென வோதிநின்றீர்
சொற்ற மொழியுண்மை யாயிடி லின்றுங்கள்
துன்பத்துக் கெல்லையு முண்டாமோ 222

பிரிவினைக் கஞ்சியங் குற்றவிந் துக்களும்
பேதலித் துள்ளம் பதைத்தனரே
பரிவின்றி நீங்களிங் கேமகிழ்ந் தீருங்கள்
பண்பையென் னென்று பகருவதே 223

பாரத நாட்டர சைக்குறை கூறிடும்
பண்பின ரும்மிற் பலருளரே
நேராறு பாகித்தா ளுத்திந்தி யாவும்வன்
நீர்மைகொண் டாலிட மேதுமக்கே 224

இந்துக்க ளின்பெருந் தன்மையைக் கோழையென்
றெண்ணுத லேழைமை யாகுமன்றே
சொந்த வுயிருமக் கீந்தநங் காந்தியின்
சொன்முறை தேர்ந்து திருந்திடுவீர் 225

அற்பருக் குற்ற திருவொக்கு நேருக்
கமைச்சுற்ற தென்றன ராணவத்தால்
அற்ப ரெவரென் றறிந்துகொண் டோமிரண்
டாட்சி முறையி னழகுகண்டே 226

பாகித்தா னத்தைப்பெற் ருங்கிருந் தேயினர்
பாரத நாட்டையும் பற்றிடவே
ஊகித் தனர்முசி லீஞ்சபை யாரிந்த
வுண்மை யறிஞ ருணர்ந்துளரே 227

உலக மெலாமுசி லீமத மாமென
வோதின ராதியின் றூதரென்ருல்
இலகு மொழிப்படி யாகிடு மேயதற்
கேன்விப ரீத வியல்புகளே 228

அல்லாவின் சித்தப் படிமுடி யும்மவற்
காருந் துணைசெய்ய வேண்டாமே
பொல்லா விகற்பம் விடுத்து மகிழ்ந்திந்தப்
புண்ணிய நாட்டினில் வாழுவிரே 229

ஆயிர மாண்டுக ளாயும் மினத்தவ
ராக்கிய வல்லலை யெண்ணியெண்ணி
ஏய மனமுள் ளுருகியுந் தாயென
விந்திய நாட்டினை யெண்ணிடுவீர் 230

தேசிய முகமதியர்

வெறிகொண்டு நும்மினத் தார்வசை வீசியும்
வெந்துயர் தந்தும் விளங்குநிறை
அறிவொன்றி நெஞ்ச மசைவின்றி நின்றநும்
ஆற்றலைப் போற்றுமிவ் வாதரையே 231

தேச நலனுக் குழைத்தவ ரேயுயர்
செம்மை பனத்திசி லாமியரே
நேச மிகுந்த சகோதர ரேயுங்கள்
நீர்மையை நேர்மையைப் போற்றுவமே 232

பலபிரி வாலும் பலமன்னர் தம்முட்
பகைகொண்ட தாலுமுன் பட்டதுவே
உலகி லினியெதிர்ப் போரையெல் லாம்வென்
றுயர்த்திடும் வாகையிப் பாரதமே 233

இந்துக்கள்

தம்முட் பலமதஞ் சாதியும் பற்பல
தாங்கி வலிமை தளர்ந்து நின்றீர்
தெம்மு னுடற்றச் சிதைந்துவிட் டீருங்கள்
செய்கையி னலெனத் தேர்ந்தறிவீர் 234

பஞ்சம ரென்று சகோதரர்க் குக்கொடும்
பாதகஞ் செய்து பழிபடைத்தீர்
விஞ்சு முடனுறுப் பிற்சில தள்ளிய
விந்தைய தென்ன விலக்கிவைத்தீர் 235

எம்மதத் தாடு மிலாவுயர் தத்துவம்
யாவு மிருக்கநும் மேழைமையால்
செம்மை யிலாதிறந் தார்களை யும்பல
தெய்வ மெனத்தொழுஞ் செய்கையென்னே 236

மாட னிருளன் கருப்பன் குரங்கணி
மாகொடுங் கூளி முதற்பலவும்
வீடருந் தெய்வ மெனத்தொழு தேயிந்து
வேதத்துக் கேபழி வேய்ந்துவைத்தீர் 237

சேற்றிற் புரளுதல் தீயெடுத் தாடுதல்
தேனுட னூன்பலி செய்திடுதல்
ஆற்றிப் பிறரவ தூறு சொலும்படி
யாக்கிவிட் டீர்க ளறிவிழந்தே 238

சாதி யெனப்பல வான பிரிவினை
தாங்கியு மொற்றுமை தள்ளிவிட்டீர்
ஓதிய சாதிக்குள் ளும்பல சாதிகள்
ஓங்கவைத் தீருர நீங்கவைத்தீர் 239

இந்து மதத்தி விழிஞன் பிறமத
மேற்கி லுயர்வென வேற்பதனல்
சொந்த மதமிழி வென்றும் பிறமதந்
தூய்மை யுளவெனுஞ் சூழ்வுதந்தீர் 240

காந்தைக்குக் காந்தன்கற் பிக்கு மொழுக்கத்தைக்
கற்பெனக் கூறிடுங் காரணத்தால்
எந்திடு கற்பது பெண்ணுக்குண் டாணுக்கிங்
கில்லை யெனும்பொரு ளெய்துவித்தீர் 241

தாங்கலை கற்றபின் மாணவர்க் கோதுவன்
சால்பமை தேசிக னங்கதுபோல்
மான்விழி யாட்குமுன் னுடைவன் கற்புற
வைத்த முறைமையை மறந்துவிட்டீர் 242

சூலுறு வாள்விப சாரம்பெண் செய்திடில்
தொன்மர பின்முறை மாறுமென்றே
வாலுறு கற்புபெண் ணுக்கெனி லாடவன்
வல்விலங் காமெனல் வாய்மையதே 243

கணவ னிறக்கி லுயிர்த்திறப் பாள்முதற்
காரிகை யாங்கனல் வீழ்ந்திறப்பாள்
எணவிரண் டாவள்மூன் றுமவள் நாதனை
யெய்த வருந்தவ மேற்பவளே 244

இத்தகை யார்க ளலாதவர் நாத
னிறக்கின் மணத்திற் கிசைந்திடுவார்
அத்தகை யாரை விதவைக ளாக்கியு
மல்லற் படுத்த லரும்பவமே 245

மறுமணம் பெண்ணுக் கிலையெனிற் பெண்ணுக்கு
வைத்த முறையொக்கு மாணுக்குமே
குறுமனத் தாலிரு வோர்க்கும்வெவ் வேறெனக்
கூறு மநீதியைக் கொண்டிருந்தீர் 246

மேவிய மூடப் பழக்க வழக்கங்கள்
விட்டுய ரிந்து மதத்தினுக்கும்
பூவிய னாட்டினுக் கும்புக ழெங்கும்
பொருந்தத் திருந்தி விளங்குமினே 247

கிறிஸ்தவர்

678243

என்பு முரியர் பிறருக்கன் புற்றவ
ரென்னு மொழிக்கிலக் காகவிவண்
அன்பி னுருவென வந்துதித் தேயுய
ரன்பு மழையைப் பொழிந்தபிரான் 248

O-,85 MDV,N
N50

தன்னென வன்னிய னைக்கரு தும்படி
சாற்றின பற்பல வாமறையே
தன்னிற் பிறர்நல மேலெனக் கொண்டிடச்
சாற்றிய தேசு மகான்மறையே 249

பகைவர்க் கருளென வோதின ரோதிய
பண்பின் படிநடை காட்டினரே
பகைவன் செவியொட்டி யீட்டியி னாலிடி
பாவிக்கும் பாலித்திட் டார்விழியே 250

சிறுவை மிசையறைந் தேவசை சேர்மொழி
செப்பினர் தீமை பொறுத்தருளி
இலகு பிதாவை யிரந்துமன் றாடிய
யேசு மகானுக் கிணையெவரே 251

மற்றவன் காதை யிழப்பதிற் றன்னுயிர்
மாய்வது நன்றெனு மாமகிமை
பெற்ற மகான்மறை பெற்றவ ரேயுங்கள்
பெற்றியை யென்னென்று பேசுவதே 252

எல்லை யிலாக்கலை ஞானங்க ளோங்கி
யிலங்கிடு மிந்து மதத்தினீர்
புல்லிய பேய்மத மென்றுமிந் துக்களைப்
பொய்யுறு பேய்மக்க ளென்றுரைத்தீர் 253

அஞ்ஞானி யென்னவஞ் ஞானத்தின் மூழ்கி
யறைவதென் னேசு மதத்தவரே
இஞ்ஞால மெங்குங் கொடுந்தொழில் யாவு
மியற்றுகின் றார்கொடும் பேய்களன்றோ 254

உலக மதங்க ளெலாங்கிண றப்மத
முற்றோர் கிணற்றுத் தவளைகளே
அலகறு சாகர மிந்து மகாமத
மாமதில் யானோர் தவளையென்றும் 255

இந்து மதத்தின் பெருமை யியம்புவென்
ஏற்குந் திறனுமக் கில்லையென்றும்
இந்த வுலகத் துறுமதம் யாவுக்கு
மெம்மதந் தாய்மத மாகுமென்றும் 256

அகில மதச்சபை தன்னி னிமிர்ந்துரை
யாடிய விந்திய னுக்கெதிரே
பகரு முரையின்றி யாவரு மாங்குற்ற
பண்பினை நீவி ரறிந்திலிரோ 257

ஏசு மதமுத லாயுல கத்து
ளிலங்கு மதங்களை யுள்ளடக்கித்
தேசு பொருந்திய விந்து மதத்திறந்
தேறுந் திறனுமக் கில்லையன்றே 258

அகந்தையி னாலுல கத்தினுக் கேயிட்
ராக்கு முமது மதத்தினர்பால்
புகுந்துப தேசம் புரிந்திடு வீரிந்துப்
புண்ணியர்க் கோதுதல் புன்மையதே 259

பிறமதத் தைக்குறை பேசிடும் பேதைமைப்
பெற்றிவிட் டேனும் மதம்புகலும்
அறமனைத் தும்புரிந் துய்வது வேமுறை
யாமென் றறிந்து திருந்துமினே 260

பேசும்படக்காட்சி

விரகக் கனலுக் கொருவிற காக
விளங்கிய பேசும் படங்களினு
லூரமற் றிளைஞ ரிளங்கொடி யார்க
ளுழலுகின் றார்க ளுவப்புடனே 261

இப்படி யேநிகழ்ந் தாவிளை யோருள
மெண்ணு மொழுக்கக் கரைகடந்தே
எப்படி யாகு மினுஞ்சில வாண்டினி
லென்றெணு முள்ள மிரங்கிடுமே 262

தற்கால மாணவர்

பயனற்ற கல்வி யுடனொழுக் கங்கெடும்
பான்மைகல் லூரியிற் பல்கினவே
நயனற்ற நீசப் பழக்க மெலாமிக
நன்கு பயின்றனர் மாணவரே 263

இடக்கொ டியம்பத் தகாத மொழிக
ளியம்பி யொருசில வாசிரியர்
கெடுக்குமிச் செய்கைநன் மாணவர் செம்மையுங்
கேடுறச் செய்கின்ற தேமிகவே 264

தேசிகன் றெய்வமென் றுதியில் மாணவர்
செம்மை திடங்தெருள் சேர்ந்தனரின்
றேசறு தேசிகன் மைத்துன னய்க்கலை
யேற்பவ ரெண்ணி யிழிந்தனரே 265

சிற்றின் நண்பர்கள் சேர்க்கையி னலறந்
தேம்பிய மாணவர் செம்மையெலாம்
அற்றன ரேபடக் காட்சியுங் கண்டிழி
வார்தரு காமுக ராயினரே 266

பக்கத்து மாணவி மேலிரு கண்களும்
பாயப் பகடி பலபுரிந்தே
தக்க கலைவிட்டுக் காமக் கனலிற்
றகாத முறைகளிற் சார்ந்தனரே 267

நன்மணக் காலம் வருமுன் மதிகெட்டு
நாரியர் காமத் துழன்றுடலில்
வன்மை யிழந்து முதுகு சிலையெனும்
வண்ணம் வளைந்து வறண்டனரே 268

ஈங்கிவ ரேமணஞ் செய்து பலபிள்ளை
யீன்றிழப் பாரிருக் குஞ்சிசுவும்
வீங்கிய நோயி னுழன்றிடு மந்திக
ளீன்ற குழவிக ளேய்த்திடவே 266

முப்பதுக் குண்ணரை மொய்த்து வளைந்த
முதுகுங் குவிந்திடு மார்புடனே
செப்பு நடைபிண மாயின ரேயிந்தத்
தீமையைத் தீர்த்தல் முதற்கடனே 270

பாரத நாட்டினை யாள்வதுங் காப்பதும்
பற்றிநிற் பாரினி மேலிவரே
பாரத ரேயிப் பரிபவந் தீர்ந்துயர்
பண்பிவ ரெய்தப் புரிகுவிரே 271

ஓரிடத் தாணும்பெண் ணுங்கலை யோதிட
லுத்தம மன்றுயர் கல்வியிலுஞ்
சீரிய சீலமுந் தேகப் பயிற்சியுஞ்
செய்வித்த லேமுதற் சீருடைத்தே 272

ஓடல் குதித்த லெழும்புதல் தாண்டுத
லொன்றிய தேகப் பயிற்சியும்வாள்
ஆடுஞ் சுழற்சி யயில்பயில் வித்தையு
மாண்மைச் சிலம்பம்வில் விஞ்சையுமே 273

மல்லமர் குத்துச் சமருடன் யோகத்தில்
மன்னிய வாசனத் தோடிடரை
வெல்லும் பிராண வசியப் பயிற்சியு
மேவித் திடம்பெறச் செய்குகவே 274

விவசாயம்

காட்டில் வரையில் மரங்கள் புரந்திடல்
காமரு சோலைகள் பற்பலவாய்
நாட்டில் வளர்த்த லிவைமழை யேமிக
நன்குறப் பெய்யப் புரிந்திடுமே 275

கங்கை பொருநை முதனதி யாவுங்
கலந்து குலாவப் புரிந்திடுவோம்
பொங்கிடு கால்பல வாக்கித் தரிசின்றிப்
பூமியெங் கும்பயிர் பூக்கவைப்போம் 276

மழைபொழி நீரைக் குளங்களி லேசிறை
வைத்து வளங்கள் பெருக்கிடுவோம்
தழைவிவ சாயஞ் சிறக்கப் புதுமுறை
தாங்கி விளைவை யுயர்த்திடுவோம் 277

பாலையை நெய்தலை முல்லையை யொல்லையிற்
பண்ணை மருதம தாகமலை
மேலிழி நீர்புவிக் குள்ளுறை நீரிவை
விட்டுத் திருத்தி விளக்குவமே 278

பூமிசை யெங்கும் விளைவன யாவுமிப்
புண்ணிய நாட்டிலுண் டாக்கிடுவோம்
நாமப் பயிர்புரி காலந் தரைபுனல்
நல்லுர நாடியே செய்குவமே 279

தாங்குவன் நோய்வரு மாறுமந் நோயைத்
தவிர்க்கு முறையையுங் கண்டறிவோம்
ஓங்கிய மேட்டு நிலத்திற் கிணறகழ்ந்
தோன்றிய பல்பயி ராக்குவமே 280

எண்ணு முழவர்க டம்முக நோக்கி
யிருந்தது பூவுல கிவ்வுழவர்
மண்ணையும் விண்ணையு நோக்கி யிருந்தனர்
மாண்பமை யுந்தொழி லேயுழவே 281

எந்திரஞ் செய்திடு மெந்திர மாதி
யெலாமிவ ணுக்குவ மெப்பொருளும்
இந்திய நாட்டி லியற்றிப் பிறரிட
மேற்ப திலாம லியங்குவமே 282

வர்த்தகம்

ஆக்கிடு வோர்க ளுழவர்க ளேயவை
யங்கங் களிப்பவர் வர்த்தகரே
ஊக்கு மிருவ ருலகுக் கிருவிழி
யொப்பர்பின் னேபிற யாவையுமே 283

நாட்டை யுயர்த்திடு வோருழ வோர்வெளி
நாட்டிலிந் நாட்டை மதிக்கவைப்போர்
தேட்டை யுடையநல் வர்த்தக ரேயிவர்
செம்மையிற் சேரு நலஞ்சிறப்பே 284

அன்னிய நாட்டிலுண் டாகும் பொருள்களி
லாவன கொண்டுவந் தேதருவார்
நன்னய நாட்டில் மிகுந்தவைக் குப்பொருள்
நல்கிப் பிறர்க்கவை நல்குவரே 285

மக்களுக் கும்மர சுக்கு நடுநின்று
மாநலஞ் செய்வரிந் நாட்டினுக்கும்
மிக்க பலபிற நாடுகட் கும்மிடை
மேவி நலஞ்செய்வர் வர்த்தகரே 286

உலகைப் புரப்ப துழவுத் தொழிலதற்
குற்ற துணைத்தொழில் வர்த்தகமே
இலகிடு மத்தொழில் சூது களவென்
றியம்பிடு மாறிங் கிருந்ததுவே 287

வாங்க லளத்தல் நிறுத்தலிற் கள்ளம்
வழங்கும் பொழுதிலு மத்தகைத்தே
ஒங்குதம் மூதிய மேகுறி யாமதி
லுற்றிடும் பாதக மோராரே 288

பட்டப் பகலிற் பலரெதி ரேபொருள்
பற்றிக் கவரு மிவர்களையே
கட்டத் துடனிர விற்கரந் தேபொருள்
கைக் கொளுஞ் சோரரொப் பாவதுண்டோ 289

பஞ்சத்தி லேமறை வாகிய வாணிபம்
பாரினிற் செய்வர் பரிவிகந்தே
நஞ்சத்தை யொத்திவர் மக்களுக் கேதுயர்
நல்குவர் தன்னல வாசைமிக்கே 290

பரசுந் தவமும் பரமும் பணமெனும்
பான்மையி னூறம் பற்றலகிலார்
அரசுக் களிக்கும் வரியைப் புரட்டுவ
ராம்பலர் நல்லவ ருஞ்சிலரே 291

எண்ண லெடுத்தன் முகத்தன னீட்டலென்
றெண்ணு மளவை யொருமுறையே
நண்ணப் புரிவதும் வர்த்தகர் நன்னெறி
நாடப் புரிவதும் நன்றுமே 292

பொதுவுடமை வாதிகள் (கம்யூனிஸ்ட்)

விடுதலைக் காகத்தே சீய வவையுடன்
மேவித் தியாக மிகப்புரிந்தீர்
படுமயி ரோப்பிய யுத்தமு மேகாதி
பத்திய யுத்தமென் றீருணர்ந்தே 293

போரி லுருசியா புக்கதும் மக்களின்
போரெனப் பொய்ம்மை புகன்றழைத்தீர்
பாரில் விடுதலைக் கான கலகத்தைப்
பாதக மென்று பழித்துரைத்தீர் 294

சுதந்திரம் பெற்றபி னுசமு மோசமுஞ்
சூழுங் கலகந் தொடங்கியதால்
இதந்தரு மேன்மை பொருந்துநுங் கொள்கைக்
கிழுக்குறச் செய்துவிட் டீர்சினந்தே 295

மக்களுக் கின்னல் வழங்குங் கொடுஞ்செயல்
மாற்றிநுங் கொள்கையை மக்களுளம்
புக்கிடச் செய்திந்தப் புண்ணிய நாடு
புகழ்பெற் றுயரப் புரிந்திடுவீர் 296

உய்யச் செயலி லுயர்வுநுங் கொள்கையென்
ஞேர்ந்திருந் தார்பெரும் பாலவரே
வெய்ய செயலும் பிறருக் கடக்கமும்
விட்டு நலங்கள் விளைத்திடுவீர் 297

(காங்கிரஸ்) தேசீய மகாசபை

அடிமைக் கடலிலிப் பாரத தேச
மமிழ்ந்திய போது மரக்கலமாய்
நெடிய சுதந்திர மாங்கரை சேர்த்தது
நேரிய தேசிய மாசபையே 298

உடல்பொரு ளாவி யனைத்துமிந் நாட்டிற்
குதவின ரிச்சபை யுத்தமரே
படியிற்கை மாறிந்த நாடென்ன செய்திடும்
பார்க்கு மழையன்ன பண்பினர்க்கே 299

மன்னுதே சீய மகாசபை முன்புறு
மாட்சிமை தன்னை மறக்கின்றதே
முன்னடை யாதிருந் தாருட் புகுந்தனர்
முற்று நடைமுறை மாறியதே 300

சிறைசென் றிருந்து தியாகம் புரிந்தனஞ்
சீரிய ரெம்மிணே யாரெனவே
அறைகின் றனர்சில ராதர வீய்ந்தவ
ராரென் றணுவு மறிந்திலரே 301

உத்தியோ கத்தில் விருப்பமும் போட்டியும்
ஓங்கின லஞ்சமு மோங்கியதே
ஒத்த தகுதியி லாரும் பதவியி
லொட்டின ரேமுறை விட்டனரே 302

பதவி யிழந்து பயித்திய மாய்ப்பழம்
பண்பை மறந்து பரதவித்தே
கூதமிகப் பற்பல கத்துகின் றூரதி
காரப் பதவியி லாசைவைத்தே 303

கள்ள மிகவர்த்த கம்புரி வார்சிலர்
கண்ட சிலர்துணே யேபுரிவார்
உள்ளுதல் வஞ்ச முருதல் செருக்கிவ
ரோதுதல் காந்திம கான்பெயரே 304

நாட்டின் நிலேயும் பழமையு மோர்ந்திலர்
நண்ணும் புதுமையு ணன்கறியார்
மூட்டுஞ் சுதேசிய மேமொழி வார்செயல்
முற்றிலும் வேறுபட் டாரிவரே 305

இந்நிலை யோர்ந்திச் சபையினி லேயறி
வேந்தி யுளார்குறை நீக்கியுயர்
மெய்ந்நிலை யாக்கிமு னுற்ற பெருமையை
மீட்பது வேயினி வேண்டுவதே 306

முஸ்லீம் சபை (லீக்)

வெள்ளையர் வஞ்சனை வித்திசி லாஞ்சபை
மென்மர மாய்விகற் பக்கிளையில்
விள்ளும் வெறுப்பு மலர்ந்துபொய் காய்த்தது
வீண்பிரி வாங்கனி தந்ததுவே 307

மதத்தினைக் காட்டித்தம் வஞ்சகச் சூழ்ச்சி
மறைத்துநற் பாமர மக்களுக்கே
கதத்தினை மூட்டிக் கலகம் விளைத்தனர்
காதகம் யாவைக்குங் காரணரே 308

பலரிங் தியாஞ்சில ரஞ்சின மென்றனர்
பண்டு முதலிது போதுவரை
கலகங் கொலைகொள்ளை கற்பழிப் பாகிய
காதகஞ் செய்தது மச்சமுற்றே 309

இந்துக்கண் மீது பகையுமிந் நாட்டுக்
கிடர்தருஞ் செய்கையுஞ் சொல்லுமிழி
நிந்தையு மல்லது நல்ல தறிந்திலர்
நீதி யணுவுந் தெரிந்திலரே 310

பாகப்பெற் ருங்கிவர் சென்றத ஞலிந்தப்
பாரத நாடு பலர்பெற்றதே
பாகத்தி ஞலிந்து மக்களுக் கேநலம்
பாதக மாமிசி லாமியர்க்கே 311

இந்துக்க ளேபகை கொள்ளன் முறையவர்க்
கில்லை பகையிவ ரேபகைத்தார்
மந்த மதியினர் முன்புரி தீமை
மறந்தவை யாவும் விளக்கினரே 312

இந்து மகாசபை

மக்மதி யச்சபை யைத்தொடர்ந் தேயிந்து
மாசபை யுங்கொடும் பாதகங்கள்
மிகவிழைத் திட்ட திருசபை யின்னெறி
விட்டிடின் மேன்மை விளங்கிடுமே 313

பாரத சமுதாய அமைப்பு

கல்வி முறையைத் திருத்திப் புதுமுறை
காட்டும் பயன்மிகு கல்வியெலாம்
நல்வித மாகப் புகுத்திப் புவிக்கொரு
நாயக மாக்குவ நாட்டினையே 314

ஆளுந் தகையு மறிவு மிகுந்தவ
ராளுஞ் சபையி லமரவைப்போம்
நீளும் பதவிக ணேர்மை மதிநிற
னேர்மை நிறைந்தவர்க் காக்கிவைப்போம் 315

பொருளினு மிக்க பெருமை யறிவுக்கும்
பொற்புறு கல்விக்கும் பூக்கவைப்போம்
தெருளுறு கல்வி யிலாத மடமையைத்
தேசத்தி னீக்கி விரட்டிடுவோம் 316

உடையிலை யுண்ண வுணவிலை தங்க
வுறைவிட மில்லையென் போர்கணம
திடையிலை யாக்கி மிடியைப் பிணிகளை
யிங்க ணிலாம லொதுக்கிடுவோம் 317

தேகத் தினிலொரு பாகத் திரத்தஞ்
செறிந்து பலவுறுப் பிற்குறைந்தோர்
பாகத் திலாது மிருக்கி லுடல்சுகப்
பண்பிலை தேசமு மத்தகைத்தே 318

நிதிபல பக்கம் வறண்டுஞ் சிலபக்க
நீடு நிறையு முறைவிலக்கிப்
பதிமிசை யாருஞ் சமரச மாநிலை
பற்றிடச் செய்குவம் பண்புடனே 319

வெள்ளை நிறத்தர் கருப்ப ரெனப்புகல்
வேற்றுமை யாவையும் வீழ்த்திடுவோம்
கொள்ளு மடிமை நிலையையு மாட்கொளுங்
கொள்கை யையுந்தகர்ப் போம்புவிமேல் 320

அச்ச மிலாதெதிர்ப் போர்க ளகத்தி
லகந்தை யறுத்தன்பு வித்திடுவோம்
இச்சக மீது தருமமு நீதியு
மெங்கு மிலங்க வளர்த்திடுவோம் 321

சத்திய மன்பு தருமத் தொடுநிறை
சாந்தமு நம்புடை காத்திருக்க
புத்தொளிர் வாழ்வு பொருந்துவஞ் சாந்தியிப்
பூதலம் பூக்கப் புதுக்குவமே 322

மெய்யறிவு

நிலையற் றவற்றை நிலையெனல் மாயையயங்
நீண்மய னீக்கி நசையறுத்தே
மலைவற் றிருவினை மாய்த்துச் சுகதுக்க
மாற்றித் தெளிந்திடன் மெய்யறிவே 323

ஞானம்- போலி ஞானம்

இயம முதலெட் டுறுப்பமை யோகத்
தெழுந்து வளர்வது வேஞானம்
வயமிகு பக்தி வழிகுறுக் காமற்ற
மட்டிகள் கொண்டதஞ் ஞானமந்தோ 324

சரியை கிரியை யறியா ரேயோக
தத்துவ மேதுந் தெரியாரே •
பரிவுறு மோனம் பொருந்தா ரேஞானம்
பற்றின மென்பரந் தோசிலரே 325

துன்பவின் பச்சுழல் பட்டுச் சுருதித்
தொடர்பின்றி யேபல சொல்லிடுவார்
வன்குரு டர்க்கு வழிதரு மந்தகர்
மானுமின் னோர்க்கு மருந்திலையே 326

புனித வாழ்க்கை

சுத்தமிக் குள்ளத் துறவடைந் தேயுண்மை
தோய்மெய் யுணர்வெய்தித் தொல்லுலகை
ஒத்தென்றுந் தன்னிலை காட்டா துறையுநல்
உத்தம வாழ்க்கை யுறுவோமே 327

பயனில்லா வாழ்வு

இறந்தவர்க் கேங்கி யிவணிலை யாமை
யியம்பி மறந்து மயலுழல்வார்
அறந்தொட ரார்பிறப் பின்பய னின்றி
யழிபவர் வாழ்வி லடைந்ததென்னே 328

உண்மை

அண்டு சுருதியொ டுத்தி யனுபவத்
தாய்ந்தறி வோருரை யாலறிந்து
கொண்டிடல் மெய்யென்ப ரல்வழிக் கொள்ளுதல்
கோட்டமுண் டென்றே கொளல்வேண்டும் 329

சித்தந் தெளியப் பழுதறக் கற்றுளத்
திண்மைகொண் டவ்வழி நிற்போமே
முத்த ரறிஞர்சொற் கேள்வியி னன்முழு
மோன வறிவு பெறுவோமே 330

அறிவு

பொறியா லறிவது பூதப் பொருட்களைப்
பூதத் ததீதப் பரம்பொருளை
அறிவா லறிகுவ ரோர்பொறி வேருென்
றறியுந் தகைமை யடைந்திலதே 331

பகுத்தறி வாலொன் றறிதன் முறையப்
பகுத்தறி வுந்தெளி வற்றிருந்தால்
புகுத்திடுங் கேடர வைக்கயி றென்னநும்
புத்திசொன் ஞலுண்மை யோபுகல்வீர் 332

கண்டதை யோர்தல் புலனறி வேபுலன்
காணுது மோர்தல் பகுத்தறிவே
விண்டற் கரியதோர் மெய்ப்பொரு ளோர்வது
மெய்யறி வென்ன விளம்புவரே 333

கடல்கண் டவரலை காண்பர்மேற் செல்பவர்
காண்பர்பன் மீன்மூழ்கு வோர்பெறுவார்
சுடர்மணி யித்தகை போற்சுரு திப்பொருள்
சூழ்ந்தறி வோர்கள் பெறும்பயனே 334

உள்ளப்படி உலகம்

எதிர்படத் தோன்று முலகையெவ் வெவ்வண
மெவ்வெவர் நோக்கினு மவ்வவணம்
பதிவுறத் தோன்றுங்கண் ணடிமுன் னுள்ள
படிவங்கள் காட்டிடும் பான்மையொத்தே 335

குரு

கண்டு மகிழ்ந்துள நம்பியே யன்புடன்
கையடை மாணவ ருய்யவென்றே
மண்டு பொருளொடுக் கம்முத யஞ்சொலி
மாநெறி யுய்ப்பவர் மாதவரே 336

யோகஅங்கம் 8. இமயம், நியமம்.

பொய்யுங் கொலையுங் களவும் விருப்பமும்
போக்கிப் புலனடக் கல்லியமம்
உய்யுந் தவமுள் ளுவப்புர நூலறி
வோதிறை போற்றறுப் பேநியமம் 337

ஆசனம்

சுவத்திகங் கோமுகம் வீரம் பதுமஞ்
சுகமரி பத்திர முத்தமயில்
தவத்தகை யாசன மாம்பிணி நீக்கிடுந்
தாவறு தேகத் துரந்தருமே 338

பிராணயாமம். பிரத்தியா காரம்

மூச்சை யிழுத்தல் நிறுத்தல் விடுத்தல்
முறைசெய லேபிரா ணயாமம்
பாய்ச்சு முபாதி யிலாமலுண் ணேக்கல்
பகரும் பிரத்தியா காரமதே 339

தாரணை. தியானம்

கண்ட மிதயந் தலைமுத லூபியிற்
காணுங் கருத்துறல் தாரணையே
மண்டைம் புலனை மடக்கிநல் யோகத்தில்
மன்னுத லாகுந் தியானமதே 340

சமாதி

காயத் துயிரைக் கபாலத் தடக்கிக்
கருதுளங் கொன்று சுவாசமின்றி
மேயபௌ தீகமும் பூதமுங் காலமும்
வென்றுதற் காணல் சமாதியதே 341

இன்பநிலை

இல்லற்று யோகத்தி லெய்தின்ப மேதென்
றியம்புகின் றுரிள மாதர்களே
புல்லுற்ற வின்பம் புகலுவ ரேற்பரி
பூரண வின்பம் புகலுவமே 342

மூச்சுநின் றுளுள நிற்கு முளநிற்கில்
மொய்ம்புறு மைம்பொறி நின்றிடுமால்
எச்சற வைம்பொறி நிற்கிற் பரவெளி
யின்பத்தின் மூழ்குவர் யோகியரே 343

ஓடுஞ் சுவாச முயிரையுண் ணும்மத
னேட்ட மடக்கி யுயர்ந்தவரே
நீடும் பசிபிணி மூப்பையு நீக்கிய
நித்திய ராவர் நிலமிசையே 344

நிட்டை

நித்தமுந் தூங்கி விழித்தெழுந் துண்டுமால்
நெஞ்சுற் றழுன் றுபன் னீதிகளைக்
கத்து வதைவிட்டுச் சத்த மறநுதற்
கண்கண்டு மோனங்கொள் காட்சிநன்றே 345

அகண்ட சொரூப பாவனைகள்

விண்டல மண்டல மெங்கு நிறைந்து
விளங்கும் பரவெளி யாமொளியைக்
கண்டனர் ஞானியர் மற்றவ ரோருருக்
கற்பித் துணர்வர் கருத்துறவே 346

அகத்துறவு, புறத்துறவு

இல்லந் துறத்தல் புறத்துற வாகு
மிலத்திருந் தாலு மிகந்திடினும்
வெல்லு மனத்திடை மேவுபற் றின்றி
விளங்க லகத்துற வாகுமன்றே 347

அகமௌனம், புறமௌனம்

பேசா திருத்தல் புறமவு னம்புலம்
பேர்வின்றி யுள்ளங் குவிந்திருக்கும்
ஆசாரந் தன்னை யகமவு னம்மென
வாய்ந்துணர்ந் தோர்க ளறைகுவரே 348

சாந்தி

எல்லா மவனென் றியாவையு நானென்
றிருத்த லுயர்விரண் டாவதினல்
பொல்லா வகந்தை புகுந்திடு மாலதைப்
போக்கிற் புனிதம் பொருந்திடுமே 349

அன்பு

அன்புஞ் சிவமு மிரண்டென் பவரறி
வற்றவ ரென்றன ரன்பிலையேல்
இன்புறு முத்தியு மில்லை யெச்சீவ
ரிடத்திலு மன்புகொண் டுய்வோமே 350

அறிவறிதல்

அறிவுஞ் சிவமு மிரண்டென் பவரறி
வற்றவ ராமவவ் வறிவறிதல்
செறியும் பொருளென் றறிஞர்சொன் ஞருளந்
தேறி யறிவறிந் துய்வோமே 351

உலகவாழ்த்து

கோட்ட மிலாதர சோங்குக வேமக்கள்
கூட்ட நெறிமுறை கொள்ளுகவே
வாட்ட மிலாது பொழிக மழையிந்த
வையமெல் லாம்வள மன்னுகவே 352

பாரத நாட்டு வாழ்த்து

பார்வியந் தேத்தவிப் பாரத நாடணி
பாக்கியம் பல்வளம் பல்குகவே
சீர்விளங் குமக்க ளாரர சேந்துக
செம்மை நலஞ்சுகஞ் செல்வமுமே 353

தமிழ் நாட்டு வாழ்த்து

செந்தமிழ் மாமொழி வாழுக வேதமிழ்த்
தேசநற் றேசுடன் வாழுகவே
பைந்தமிழ் மக்களிப் பார்புக ழச்திருப்
பன்னல மேமிக வாழியவே 354

நீதி நெறிக் கும்மி முற்றுப்பெற்றது.

சாற்றுக் கவிகள்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
2	16	கலைகளெல்லா	கலைகளெல்லாம்
3	11	அக்குய்மியி	அக்குமியி
5	5	உயர்தர	உயர்தரக்

O-, 85MDV, N

முகவுரை

N50

7	22	நவசிவய	நமசிவய
7	15	6	VI
12	4	அவைகனி	அவைகளி

நூல்.

பக்கம்	பாட்டு	வரி	பிழை	திருத்தம்
2	1	4	தெளிந்திட	திருந்திட
2	2	2	தள்ளலுடன்	தள்ளிடுவோம்
2	4	2	தள்ளலுடன்	தள்ளிடுவோம்
3	9	4	மே பூப்போமே	ம் பொருந்துவமே
4	12	3	பேரர	பேரா
5	20	1	பேதமை	பேதைமை
7	29	4	நீங்கி	நீக்கி
13	57	1	பொழியவு	மொழியவு
14	61	4	மோகத்தை	மோகத்
15	68	3	நந்தலிலாது	நந்திறனேங்கப்
17	79	4	பொருந்திடுமே	பொருந்திடுமோ
17	80	3	வென்கிலுங்	வாகிலுங்
19	88	2	ஓமந்த	ஓவந்த
23	108	3	உமத்த	அமைத்த
23	108	4	ஓதுவர்	அண்டுவர்
25	119	4	மிடிசெயுமே	ச் செயுமிடியே
29	138	2	சோட்சி	சோச்சி
34	164	1	தன்னாட்டினிலே	தந் நாட்டினிலே
39	187	1	மேலம்	மேலப்
55	269	3	வீங்கிய	ஏங்கியே
55	269	4	ளேய்த்திடவே	ளேய்ந்திடவே
60	292	1	மூகத்தன	மூகந்திட
60	293	3	படுமயிரோப்பிய	படுமவைரோப்பிய
71	349	3	மாலதை	பேலதை
72	351	2	ராமவவ்	ராமவ்

B4
11-69

சரஸ்வதி பிரஸ், கோவில்பட்டி:-50.